# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 17 திங்கட்கிழமை (30-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:155


யாழ்ப்பாணம்

## போக்குவரத்துக்கு அனுமதி மறுப்பு

மட்டக்களப்பு,ஏப்.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குப் பொது மக்கள் செல்வதற்கு படையினர் நேற்று அனுமதி வழங்கவில்லை.

நகரில் இருந்து சென்ற பொது மக்கள் பட்டிருப்புப் பாலத்தில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

(உ-3-9)

## 240 படையினர் உயிரிழப்பு!

கொழும்பு,ஏப்.30

எழுதுமட்டுவாழ் - முகமாலைப் பகுதிகளில் இடம்பெற்ற 'அக்கினிச் சுவாலை1' இராணுவ நடவடிக்கையில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 240 ஆக உயர்ந்துள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி பி.பி.ஸி. சிங்கள சேவை நேற்றிரவு அறிவித்தது.

இந்த நடவடிக்கையில் அமெரிக்கத் துருப்பினர் ஈடுபட்டதாக வெளிவந்த செய்திகளை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன மறுத்துள்ளார்.

எமது துருப்பினருக்கு பயிற்சி அளிக்கும் பணியையே அமெரிக்கப் படையினர் மேற்கொள்கின்றார்களே தவிர எந்த இராணுவ நடவடிக்கையிலும் அவர்கள் நேரடியாக பங்குபற்றுவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-3-9)

## வவுனியாவில் மாணவி கைது

வவுனியா,ஏப்.30

வவுனியா கல்வியியற் கல்லூரி 3 ஆம் ஆண்டு மாணவி ஒருவர் படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு அம்பலவன் பொககனையைச் சேர்ந்த இந்த மாணவி விடுமுறைக்காக வன்னிக்கு சென்று கொண்டிருந்தவேளை பிரமணாளங்குளம் சோதனை நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

(உ-3)

## இந்த இராணுவ பின்னடைவின் பின்பாவது அரசு தணிக்கையை முற்றாக நீக்க வேண்டும்

### விமர்சகர் இக்பால் அத்தாஸ் கருத்து

கொழும்பு,ஏப்.30

'அக்கினிச் சுவாலை 1' இராணுவ நடவடிக்கை பின்னடைவில் முடிந்த இந்த நிலையிலாவது தணிக்கையை முற்றாக நீக்குவதுதான் அரசின் நலனுக்கு உகந்தது.

- இப்படித் தெரிவித்திருக்கிறார் பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ்.

'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் இந்த இராணுவப் பின்னடைவு குறித்து விஸ்வாரியாக அவர் எழுதிய களநிலைவரம் பற்றிய கட்டுரையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அந்தக் கட்டுரையில் அவர் குறிப்பிட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

எதிரியின் எதிர்த்தாக்குதல் எதிர்கொள்ள முடியாததாக இருந்ததால- 'அக்கினிச் சுவாலை-1' இராணுவ

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயிலில் புலிகள் தாக்குதல்

நாகர்கோயில் முன்னரங்க நிலைகள் மீது நேற்று முன்தினம் காலை மோட்டார் மற்றும் ஆட்லறிகள், சிறு ஆயுதங்கள் கொண்டு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி உள்புக முயன்றதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

படையினர் பதில் தாக்குல் நடத்தி அந்த முயற்சியை முறியடித்துவிட்டதாகவும் -

வரணிப் பகுதி மீதும் புலிகள் ஆட்லறித் தாக்குதலை மேற்கொண்டதாகவும் - தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

(உ-3)

# சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வருகிறார்!

## பிந்திய யோசனைகளுடன்

கொழும்பு,ஏப்ரல்30

**விடுதலைப் புலிகள் கடந்த நான்கு மாத காலமாகக் கடைப்பிடித்து வந்த ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை விலக்கிக் கொண்டதை அடுத்து அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பெரும் மோதல்கள் வெடித்துள்ள நிலையில் -**

**சமாதான முன் முயற்சிகளை மேற்கொள்வதற்காக நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான பிந்திய யோசனைகளுடன் வரும் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்கிரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடுவார் எனத்தெரிகின்றது.

நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்கக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தகளப் பின்னடைவுகளை அடுத்து சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதி மந்திராலோசனை

கொழும்பு,ஏப்.30

எழுதுமட்டுவாழ் - முகமாலைப் பிரதேசத்தில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் அவர்கள் எதிர்கொண்ட பின்னடைவுகள் குறித்தும் -

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிரேஷ்ட அமைச்சர்களுடன் நேற்றுக் கலந்துரையாடல்களை நடத்தினார்.

நேற்றுக்காலையும் மாலையும் இந்தக்கலந்துரையாடல்கள் இடம் பெற்றபோதும் -

அவற்றில் எடுக்கப்பட்ட முடிவுகளின் விபரம் வெளியிடப்படவில்லை என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3)

## மேதினத்தை ஒட்டி கொழும்பு மாநகரில் நாளை 22 பேரணிகள், 35 கூட்டங்கள்

கொழும்பு,ஏப்.30

மேதினத்தை ஒட்டி நாளை கொழும்பில் 35 கூட்டங்களும் 22 பேரணிகளும் நடத்த ஏற்பாடாகி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் கூட்டாகவும் தனித் தனியாகவும் இந்தக்கூட்டங்களையும் பேரணிகளையும் ஏற்பாடு செய்துள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊர்வலத்தைத் தொடர்ந்து கூட்டம் நாரஹேன்பிட்டியிலும் -

ஐ.தே.கவின் கூட்டம் கட்டுநாயக்கவிலும் - இடம்பெறவுள்ளன.

கட்டுநாயக்கவில் பேரணி நடத்த ஐ.தே.கவுக்குப் பொலீஸார் அனுமதி வழங்காததால் அங்கு கூட்டம் மட்டுமே இடம்பெறவுள்ளது.

மேதின நிகழ்வுகளை ஒட்டி கொழும்பு மாநகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

(உ-3-9)

## இதய சுத்தியுடன் பேச்சுக்களில் கலந்து கொள்ளும்படி புலிகளுக்கு அரசு மீண்டும் அழைப்பு

### விசேட ஊடகத் தகவல்நிலையம் 18பக்கங்களில் அறிக்கை

கொழும்பு,ஏப்.30

விடுதலைப் புலிகள் இதயசுத்தியுடன் சமாதானப் பேச்சுகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் மீண்டும் அந்த அமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளது.

விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்துள்ள நீண்ட அறிக்கை ஒன்றில இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக கடைப்பிடித்துவந்த யுத்த நிறுத்தத்தை வாபஸ் பெற்றமை தொடர்பாகவும் -

அரசு மீது விடுதலைப் புலிகள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் -

அரசின் நிலைப்பாட்டை விளக்கி 18 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையை விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று விடுத்தது.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து சர்வதேச

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மேதின நிகழ்வுகளுக்காக நகரில் சில வீதிகளில் நாளை போக்குவரத்துக்குத் தடை

யாழ்ப்பாணம்,ஏப்.30

மேதினமான நாளை நகரில் சில பகுதிகளில் போக்குவரத்துத் தடை செய்யப்படும் என்று யாழ்.பொலீஸார் அறிவித்துள்ளனர்.

இந்து மகளிர் கல்லூரி வீதிப் பகுதி, யாழ்இந்துக் கல்லூரி ஒழுங்கை, இந்துக் கல்லூரி வீதி, கனகசபை ஒழுங்கை, கஸ்தூரியார் வீதிப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசம் அன்று காலை 10.30 மணி முதல் பிற்பகல் 6.30 மணிவரை போக்குவரத்துக்குத் தடை செய்யப்படும்.

பேரணி இடம்பெற வசதியாக அந்தப் பேரணி செல்லும் பாதைகளில் -

நாவலர் சந்தியில் இருந்து நல்லூர் ஆலயம் வரை பருத்தித்துறை பிரதான வீதியில், முற்பகல் 1.30 மணி முதல் 3.30 மணி வரைக்கும் -

நாவலர் சந்தியிலிருந்து திருநெல்வேலிச் சந்தி வரை பருத்தித்துறை வீதியில் பிற்பகல் 3.30 மணி முதல் 4.30 மணி வரைக்கும் - போக்குவரத்து தடைசெய்யப்படும்.

(உ-3)

## படையினரின் மேலும் 26 சடலங்கள் நேற்று விடுதலைப் புலிகள் ஒப்படைப்பு

வவுனியா,ஏப்.30

எழுதுமட்டுவாழ் - முகமாலைப் பிரதேசத்தில் கடந்த வாரம் இடம் பெற்ற சமரின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களில் இரண்டாவது தொகுதியான 26 சடலங்கள் நேற்றுக காலை வன்னியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

படையினரிடம் கையளிப்பதற்காக இந்தச் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் வவுனியாவுக்கு எடுத்து வந்தனர்.

நேற்று முன்தினம் கையளித்த 30 சடலங்களுடன் சேர்த்து இதுவரை 56 சடலங்களைப் புலிகள் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்ட 30 சடலங்களில் 17 சடலங்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## களப்பலியான புலிகளில் மேலும் 22 பேரின் விவரம்

வவுனியா,ஏப்.30

எழுதுமட்டுவாழ் - முகமாலைப் பகுதியில் கடந்த வாரம் ஸ்ரீ லங்காப் படைகளுக்கு எதிராக நடத்தப்பட்ட எதிர்த்தாக்குதல் நடவடிக்கையில் தமது தரப்பில் உயிரிழந்த எல்லைப் படை வீரர்கள் மூவர் உட்பட மேலும் 22 பேரின் பெயர் விவரங்களைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

✪ மேஜர் கலையரசி(திரவியம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் மோதல்

கொழும்பு,ஏப்.30

வவுனியா மாவட்டத்தில் ஓமந்தையில் நேற்றுக்காலை 6.45 மணியளவில் ரோந்துவந்த படையினருககும விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் மூன்று படையினர் காயம் அடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

(உ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வடபகுதி வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின்

# மேதின அறைகூவல் - 2001



**அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!**

கடந்த இரு தஸாப்தங்களாகத் தொடர்கின்ற யுத்தம், அழிவுகளையும் அவலங்களையுமே எமக்குத் தந்துள்ளது. இழந்து போன எமது அரசியலுரிமைகளில் எதனையும் இதுவரை கால யுத்தம் பெற்றுத் தரவில்லை. மறுதலையாக எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை சிதைத்துள்ளது. அநாதைகளான சிறுவர்கள், விதவைகளான இளம் பெண்கள், கவனிப்பாரற்ற முதியவர்கள், அகதிகளாக அலையும் அவல வாழ்வு, வேலைவாய்ப்பின்மை மற்றும் சீர்குலைந்துள்ள பொருளாதாரம் என்பவற்றினால் தமிழ் பேசும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் கண்ணீர் சிந்தும் நிலை.

ஏன் இந்த அவலம்? எதுவரை இந்த அவலத்தினைத் தொடர அனுமதிப்பது?

யுத்த அவலத்துக்குள்ளும், அரசியல், அன்றாடப் பிரச்சினைக்குள்ளும் சிக்கிச் சீரழியும் எமது மக்களுக்கு அரசியல் அபிலாசை நிறைவேற்றிட, யதார்த்த பூர்வமான அரசியல் பாதையில் மாற்று வழியில் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளுக்கு ஊடாக நிரந்தரச் சமாதானத்தையும் கௌரவமான அரசியல் தீர்வையும் நோக்கி ஈ.பி.டி.பி. செல்கின்றது.

எம் இனிய தமிழ் பேசும் மக்களே, நிரந்தரச் சமாதானத்திற்காக நிம்மதியான வாழ்விற்காக ஈ.பி.டி.பியுடன் அணி திரளுங்கள்!

## இந்த வகையில்

- ❒ *வடக்கு – கிழக்கு என எக்காலமும் பிரிபடாத ஈழமா நிலத்தில் விசேட அதிகாரங்களுடன் பூரண சுயாட்சி.*
- ❒ *மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!!*
- ❒ *இயல்பு வாழ்வை மீளக் கட்டியெழுப்பிட, அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்போம்!*
- ❒ *வீராவேச வார்த்தை பேசும் வேடிக்கை அரசியலை நிராகரிப்போம்!*
- ❒ *தற்கொலைப் பாதையை நிராகரிப்போம்!*
- ❒ *மாற்றுவழியில் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளுக்கு ஊடாக நிரந்தரச் சமாதானத்தையும் கௌரவமான அரசியல் தீர்வையும் நோக்கி நடைபோடுவோம்!*

**என்று ஈ.பி.டி.பி. தனது மே தின அறைகூவலை விடுக்கின்றது.**

உழைப்பவர் உரிமைகளை நிலைநாட்ட தளராது உழைப்போம்!
தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம்!
என்றும் நாம் மக்களின் நண்பர்கள்!

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**

(87242)

# குடியிருப்புகள் மீதான தாக்குதலை தவிர்த்துக்கொள்ளக் கோரிக்கை

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ளது.

அப்பாவிப் பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை அரச படைகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பூநகரியில் இடம்பெற்ற விமானத் தாக்குதல் தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெள்ளியன்று பூநகரியின் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து விமானப் படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் ஒரு அப்பாவித் தாய் கொல்லப்பட்டுள்ளதுடன் நால்வர் படுகாயங்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். மேற்படி அரச விமானப் படையினரின் கண்மூடித்தனமான – பொது மக்கள் மீதான — தாக்குதல் எமக்கு ஆழ்ந்த கவலை தருவதாக உள்ளது.

வன்னியில், வாழ்ந்து வருகின்ற அப்பாவிப் பொது மக்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் மிகமோசமான பொருளாதாரத் தடையினால் நடைப் பிணங்களாகவே விரக்தியின் விளிம்பில் வாழ்ந்து வருகின்றார்கள்; இவ்வாறு பரிதாபகரமாக வாழ்கின்ற மக்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் யுத்த சூழ்நிலையினால் அகதிகளாக்கப்பட்டு முகாம்களிலும் மரங்களின் கீழும் வாழ்ந்து வருகின்றனர்.

ஏதிலியான மக்கள் மீது அரச வான்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல் மனிதர்கள் மேற்கொள்ளும் காடைத்தனத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டது.

இந்தக் கோரமான செயலினையிட்டு மிக மனவருத்தம் அடைகின்றோம். யுத்தம் இடம் பெறுகின்ற போதும் சாதாரண காலங்களிலும் பொதுமக்களின் குடியிருப்புக்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துவதனை தவிர்த்துக் கொள்ளுமாறு அரச படைகளைக் கேட்டுக்கொள்கின்றோம்—என்றுள்ளது.

# சமாதான முன் முயற்சிகளை ஆயர்கள் குழு வலியுறுத்தும்

யாழ்ப்பாணம், ஏப். 30

சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் ஆர்வமாக உள்ளனர். எனவே சமாதான முயற்சிகளை உடன் முன்னெடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி எதிர்கட்சித் தலைவர் நோர்வேத் தூதர் ஆகியோரை நேரில் சந்தித்துக் கேட்கவிருக்கின்றோம்.

வன்னி சென்று திரும்பியுள்ள ஆயர்கள் குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

தங்களை நேரில் சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கித் தருமாறு இம் மூவரிடமும் தாங்கள் கோரியுள்ளதாகவும்—

மூவரையும் சந்திக்கும் போது விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனுடன் தாங்கள் நடத்திய கலந்துரையாடல்கள் தொடர்பான விவரங்களை அவர்களிடம் தெரிவிக்க இருப்பதாகவும்—

ஆயர்கள் குழுவின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

வன்னியில்மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை எடுத்துக் கூறி பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும்என்றும்—

யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும்—தாங்கள் வலியுறுத்தப் போவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

பெரும்பாலும்இந்தச் சந்திப்புக்கள் இவ்வாரம் இடம்பெறலாம் என்றும் அவர்நம்பிக்கை வெளியிட்டார். (உ-3)

### அரசும் புலிகளும் விருப்பத்துடன்

# இணைந்து செயற்பட்டால்தான் தீர்வு முயற்சிகள் வெற்றிபெறும்

## சொல்ஹெய்ம் கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 30

சமாதானப் பயணத்தில் அரசும், விடுதலைப் புலிகளும் ஒன்றிணைந்துவிருப்பத்துடன் செயற்பட வேண்டும். அப்போதுதான் நோர்வே அரசினால் தீர்வு முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் "லங்கா அக்கடமிக் ஒன்லைன்" செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான செயல்முறை இன்னமும் தயாரிப்பு நிலையிலேயே உள்ளது. விரைவில் இரு தரப்பினரும் பேச்சுக்கு உடன்படுவார்கள் என நான் நம்புகின்றேன்.

யாழ். குடாநாட்டில் இலங்கை இராணுவம் தொடுத்த தீவிர தாக்குதல்கள் மத்தியில் யுத்த நிறுத்தம் ஒன்று குறித்த சாத்தியக் கூறுகளை இலங்கை அரசு நிராகரித்துள்ளது. என்றாலும் இத்தகைய தாக்குதல்கள் நோர்வே அரசு மேற்கொண்டு வரும் சமாதான முன்முயற்சிகளுடன் தொடர்பில்லாதவை என்றும்—

நேர்மையுடனும், நல்லெண்ணத்துடனும் செயற்படும் வரையில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படமாட்டாது என்றும்—

அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த நிலைப்பாடு பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கைகளுக்கு எதிரானதாகும்.

தனது அரசாங்கம் சமாதானப் பேச்சுச் சம்பந்தமான அர்ப்பணிப்புணர்வோடு உள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். இலங்கை அரசின் நடத்தை காரணமாக தமது யுத்த நிறுத்தம் அர்த்தமற்றதாகி விட்டதென்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். தமது யுத்த நிறுத்த காலத்தில் 160 போராளிகள் கொல்லப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

—இவ்வாறு அவர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார். (உ-7)

### அரசுக்கு எதிரான

# நம்பிக்கையில்லாப் பிரேரணை மே 22இல் நாடாளுமன்றத்தில்?

கொழும்பு, ஏப். 30

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நாடாளுமன்றம் அமர்வுகளுக்காகக் கூடும் வேளையில்—

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு ஐ.தே. கட்சி முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள எதிர்க்கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு, விரிவாக ஆராயப்பட்டு அதற்கு அங்கு அங்கீகாரம் பெறப்படும் என ஐ.தே. கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவு திரட்டும்வகையில் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியா கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளார் என்று அவர் மேலும் சொன்னார். (உ-3)

### நாவலர் மண்டபத்தில் நடைபெறும்

# மேதினக் கூட்டத்தில் பங்குபற்ற அதிபர், ஆசிரியர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30

தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழுவின் ஏற்பாட்டில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ள மேதினக் கூட்டத்தில் பாடசாலை அதிபர், ஆசிரியர்களைப் பங்குபற்றுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் இது தொடர்பாகச் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் யாழ். மாவட்டத்தில் அதிபர், ஆசிரியர் தமது கடமைகளைச் சிறப்புடன் செய்து வருகின்றனர். ஆசிரியர்களும் உழைப்பாளர்கள் என்ற வகையில் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளி உலகுக்குக் கொண்டு செல்வதற்காக இந்த மேதினத்தைப் பயன்படுத்துவது மிகவும் அவசியமாகும்'' என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-3)

# தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற முஸ்லிம்கள் மீது கொடூரத் தாக்கு!

## யாழ். நகரில் அரங்கேறிய காடைத்தனம்

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியிலுள்ள தமது வீடுகளைப் பார்வையிடச்சென்ற முஸ்லிம்கள்கொட்டடியில் வைத்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் முப்பது பேர் கொண்ட குழுவொன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

தமது வீட்டுக் கூரைகள், வீட்டுக் கற்கள் திருடப்பட்டு வருவதாகத் தகவல் கிடைத்ததை அடுத்து அதனை தடுக்கச் சென்றபோதே திருடர் குழுவினால் இவர்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

யாழ்.நகரின் தென்கிழக்கு பகுதியைச் சேர்ந்தவர்களாலே இவர்கள் தாக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இத் தாக்குதலில் காயமடைந்த எஸ். எச். அஸ்மி (வயது 33), பெரிய கடை ஜும்மா பள்ளி வாசல் தலைவர் எம். எஸ். ராஸீக் (வயது 55) ஆகியோர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தம்மைக் கொட்டடியில் வைத்து வழி மறித்து இந்தக் குழுவினர் சைக்கிள் செயின்களாலும், பொல்லுகளாலும் தம்மைத் தாக்கியதாக அவர்கள் இருவரும் தெரிவித்தனர்.

இச் சம்பவம் குறித்து யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். முஸ்லிம் பகுதியில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் கடந்த நான்கு,ஐந்து வருடங்களாக அவர்களின் வீட்டுப் பொருள்கள் திருடப்பட்டு வருவதுதெரிந்த .து. (உ-5)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஏப். 30

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் கொக்குவில் ஸ்ரீவராகி விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

அரியாலை காந்தி விளையாட்டுக் கழகம் எதிர் உடுவில் சிந்து விளையாட்டுக் கழகம். (க-86)

★ ★ ★

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக் கழக விளையாட்டு அவை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணிக்கு —ஜெனிஸ்ரார் வி. க. எதிர் யூனியன் வி. க.

★ பிற்பகல் 4.30 மணிக்கு —யாழ். பல்கலைக்கழக வி. க. எதிர் சண்டிலிப்பாய் வி. க. (உ-3)

# புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு ஜயலத் புதனன்று செல்கின்றார்

கொழும்பு. ஏப். 30

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா நாளை மறுதினம் புதன் கிழமை வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கின்றார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருக்கும் அவர் அங்குள்ள மக்களுக்கு மருத்துவ சிகிச்சை முகாம்களை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

வன்னிக்குத்தாம்செல்வதற்கான அனுமதியை அரசு வழங்கியுள்ளதாக அவர்தெரிவித்துள்ளார்.

வன்னியில் போதிய மருத்துவ வசதிகளின்றி கஷ்டப்படும் அகதிகளுக்கும் மற்றையவர்களுக்கும் இலவச கண் சிகிச்சை முகாம்களை நடத்துவதற்குத்தனது தலைமையிலான குழு அங்கு செல்கின்றது என்றும்—

இந்த விஜயத்தை மன்னார் ஆயர் வண ராயப்பு யோசப்பும், செஞ்சிலுவைச் சங்க தேசக்குழு வதிவிடப் பிரதிநிதியும் வெகுவாக வரவேற்றுள்ளதாகவும்–அவர் மேலும் தெரிவித்தார்.

அரசின் அனுமதி பெற்று அண்மையில் ஜயலத் ஜெயவர்த்தனா விடுதலைப் புலிகளின் பகுதிக்குச் செல்வதற்காக வவுனியாவில் இருந்து சென்ற சமயம் பிரமணாலங்குளத்தில் வைத்துப் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## சமுர்த்தி பயிற்சி நெறி

வலி.மேற்கு, ஏப். 30

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும், சமுர்த்தி முகாமையாளர்களுக்கும், சமுர்த்தி சிறு குழுக்கள் அமைப்பதுதொடர்பான பயிற்சி நெறி யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் செயலகதிட்டமிடல் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்புக்கு இணங்க பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

சங்கானை பிரதேசசெயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் சமுர்த்தி முகாமையாளர் சம்பந்தமான பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(க-175)

# செய்திக் கொத்து

## குருநகரில் நடந்த விழிப்புணர்வு நிகழ்வு

குருநகர், ஏப். 30

குருநகர் சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக்கழகம் கல்வி சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை அண்மையில் குருநகரில் நடத்தியது.

இந் நிகழ்ச்சியில் ஓட்டப் போட்டிகள், பாட்டு, பேச்சு, பொது அறிவுப் போட்டிகள் இடம்பெற்றன.

குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக்கழகத்தின் அனுசரணையுடன் குருநகரிலுள்ள சனசமூக நிலையங்களில் கல்வி கற்கும் மாணவ — மாணவிகள் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். (க-51)

## சத்திர சிகிச்சை கூடத்துக்கு புதிய தொட்டி

தென்மராட்சி, ஏப். 30

மந்திகை ஆதார வைத்தியசாலைசத்திரசிகிச்சைக் கூட்டத்திற்கு தண்ணீர் வழங்குவதற்கு புதிய 'பிளாஸ்ரிக்' தொட்டி பொருத்தப்படவுள்ளது.

ஆஸ்பத்திரி பதில் மாவட்டவைத்தியஅதிகாரி டாக்டர் அ. ஞானசுதன் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாருடன் தொடர்பு கொண்டதையடுத்து புதிய தண்ணீர்த் தொட்டி பொருத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-117)

## இணுவிலில் பாதீனியம்

யாழ்ப்பாணம், ஏப். 30

இணுவில், மருதனார் மடம் பகுதிகளில் பாதீனியங்களை அதிகமாகக் காணப்படுகிறது.

விவசாய நடவடிக்கை மும்முரமாக உள்ள இந்தப் பகுதியில் பாதீனியம் அதிகமாக இருப்பதையிட்டு விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மருதனார்மடம் சந்தைப் பகுதியில் இந்தப் பாதீனியங்களை அதிகமாகக் காணப்படுவதோடு இணுவில் கிழக்கு, மேற்கு ஆகிய பகுதிகளிலும் ஆங்காங்கே வளர்ந்துள்ளது.

(க-4)

## புதிய தபாற் பெட்டி

சண்டிலிப்பாய், ஏப். 30

சில்லாலை கதிரைமாதா ஆலயத்திற்கு சமீபமாக— பிரதான வீதியில் சேதமடைந்திருந்த நிலையில் நீண்டகாலமாகக் காணப்பட்ட தபால்பெட்டி அகற்றப்பட்டு புதிய தபாற் பெட்டி ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இதேவேளை--சில்லாலை தெற்கு செ. ஜேம்ஸ் வீதிச் சந்தியில் சேதமடைந்து கதவு இல்லாத நிலையிலிருந்த் தபால்பெட்டியும் திருத்தப்பட்டுள்ளது.

(க-135)

## வடமராட்சி கிழக்கில் மலேரியா தீவிரம்

வடமராட்சிகிழக்கு, ஏப். 30

வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடந்த பத்துத் தினங்களில் 35 பேருக்கு 'மலேரியா' நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அம்பனில் 21 பேரும் குடத்தனையில் 14 பேரும் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். (க-182)

## கத்திக்குத்து

யாழ்ப்பாணம், ஏப். 30

சண்டையைப் பார்க்கச் சென்றவர் ஒரு பகுதியினரின் கிறிஸ் கத்திக்குத்துக்கிலக்காகிக் காயமடைந்தார்.

ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கனகராசா விக்னேஸ்வரன் (வயது 23) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-15)

## துர் நாற்றம் வீசுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ் நகரில் தந்தை செல்வா நினைவுத் தூபி அமைந்துள்ள பகுதியில் தூர்நாற்றம் வீசுகிறது. அங்குள்ள வடிகால் ஒன்றில் தேங்கியுள்ள சேற்றினாலே இந்த தூர்நாற்றம் வீசுவதாகத் தெரியவருகிறது.

அண்மையில் இந்தப் பகுதியில் நடைபெற்ற தந்தை செல்வா நினைவஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்கள் துர்நாற்றத்தைத் தாங்க முடியாது மூக்கைப்பொத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது. (க-5)

## 'கொட்டன்' அடியில் முடிந்த தர்க்கம்

யாழ்ப்பாணம், ஏப். 30

ஒன்றாகச் சேர்ந்து மது அருந்திவிட்டு வந்து கொண்டிருந்த இரு நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்டவாய்த்தர்க்கம் ''கொட்டன்'' அடியில் முடிந்தது.

பருத்தித்துறை, கற்கோவளம், புனித நகர்ப்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் எட்டுப்பிள்ளைகளின் தந்தையான அல்பிறட் இராசேந்திரம் (வயது 39) என்பவரே தலையில் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சுய நினைவு இழந்த நிலையில் காணப்படும் இவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

(க-15)

## விவசாயிகள் பாதிப்பு

உரும்பிராய், ஏப் 30

உரும்பிராய்ப் பகுதியில் கட்டாக்காலிக் கால்நடைகள் பயிர்களை அழித்து வருவதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கழுத்தில் கயிறு எதுவுமின்றி வருவதனால் அவற்றை பிடிக்கவும் முடிவதில்லை என விவசாயிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். (க-154)

## வறிய மாணவருக்கு சீருடை, கொப்பிகள்

வலிகாமம் மேற்குப் பாடசாலைகளில் மிகவும் வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்கு சீருடை, அப்பியாசக் கொப்பிகள் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் இவை வழங்கப்படவுள்ளன.

சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக் குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கே இவை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# யுத்தம் மூலம் புலிகளை அழித்து தீர்வைத் திணிக்க முயற்சி

### அதற்காகவே புதிய படை நடவடிக்கை என்கிறார் 'மன்னார் ஆயர்

மன்னார், ஏப். 30

யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளை அழித்துவிட்டுத் தமிழ் மக்களுக்கு வேண்டப்படாத அரசியல் தீர்வை அவர்கள் மீது திணிப்பதற்கே அரசாங்கம் புதிய படை நடவடிக்கைகளை முனைப்புடன் ஆரம்பித்து வருகின்றது.

— இவ்வாறு எச்சரித்துள்ளார் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு யோசப்.

இராணுவத்தினரால் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட ''அக்கினிச் சுவாலை 1'' இராணுவ நடவடிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயர் மேலும் கூறியதாவது:-

ஆனையிறவை மீண்டும் கைப்பற்றவேண்டும் என்பதற்காக அரசாங்கம் ஆரம்பித்துள்ள ''அக்கினிச்சுவாலை 1'' நடவடிக்கை நாடு முழுவதையும் மரண வீடாக்கியுள்ளது.

யுத்தத்தின் மூலம் புலிகளை அழித்து விட்டு தமிழ் மக்களுக்கு வேண்டப்படாத தீர்வு ஒன்றைத் திணிக்கவே அரசாங்கம் படை நடவடிக்கைகளை முனைப்புடன் ஆரம்பித்து வருகிறது.

அரசாங்கம் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி விட்டுச் சமாதானப் பேச்சுகளுக்குத் தயாராக வேண்டும் என்ற கோரிக்கையையே கத்தோலிக்க ஆயர்களாகிய நாம் அரசிடம் முன்வைத்து வருகின்றோம்.

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு நோர்வே அரசால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தத் தயாராகவே உள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டிய அரசாங்கம் வரட்டுக் கௌரவத்துக்காகவும், தனது அரசியல் இலாபத்துக்காகவும் இந்த யுத்தத்தை நடத்தி வருகிறது—என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-6)

### பாலர் பாடசாலை முடிந்ததும்

## சைக்கிளில் ஏற்றிச் சென்று மாணவியின் சங்கிலி அபகரிப்பு

பாலர் பாடசாலைமுடிந்து வெளியேறிய மாணவியை ஏமாற்றிச் சைக்கிளில் ஏற்றிச் சென்ற இளைஞர் இந்த மாணவி அணிந்திருந்த 15 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி மற்றும் வளையல்களைக் கழற்றிக்கொண்டு ஆலயம் ஒன்றுக்கு அருகில் இறக்கிவிட்டுத் தப்பியோடிய சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சியில் இடம்பெற்றது.

துன்னாலை இந்திர அம்மன் ஆலயத்துக்கு அருகில் உள்ள பாலர் பாடசாலையில் இருந்து மாணவியை உறவினர் போல் நடித்தே அந்த இளைஞர் ஏற்றிச் சென்றுள்ளார்.

மழை பெய்ததால் தாமதமாகச் சென்ற மாணவியின் தாயார் இடைவழியில் திகைத்து நின்ற மகளைக் கண்டு விடயத்தை அறிந்து கொண்டார்.

இதுகுறித்துப்பருத்தித்துறை பொலீஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீசாலை இழக்கிலிருந்து இடம்பெயர்ந்து மந்திகையில் தங்கியுள்ள புனிதராசா அனுசியா (வயது 5) என்னும் மாணவியின் நகைகளே அபகரிக்கப்பட்டன. (க-17)

## ப.நோ.கூ.கிளை முகாமையாளர் இடைநிறுத்தம்

ப.நோ.கூ. இளை ஒன்றில் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கான கையிருப்புக் குறைவைத் தொடர்ந்து கிளை முகாமையாளர் வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

அளவெட்டி — மல்லாகம் ப.நோ.கூ.சங்கக்கிளை ஒன்றிலேயே கணக்கெடுப்பின் போது இந்தக் கையிருப்புக் குறைவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (க-86)

### கட்டட வேலைகள் பூர்த்தியாகியும்

# புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் இயங்க முடியாத நிலை ஏன்?

யாழ்ப்பாணம், ஏப் 30

தெல்லிப்பழையிலுள்ள புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தின் கட்டடத் திருத்த வேலைகள் முடிவடைந்த போதும் அதனை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு என வடக்கில் மீள்குடியமர்வு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினால் 24 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த ஒதுக்கீட்டின் கீழ் கட்டடத் திருத்தம் மற்றும் கட்டட மின் இணைப்பு வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. தற்பொழுது இந்த நிலையம் அமைந்துள்ள காணியில் குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் கைவிடப்பட்டிருந்த இந்த நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த கோபால்ற் இயந்திரம் உட்பட பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

எனினும் இந்த நிலையத்தை இயங்கச் செய்யும் முயற்சிகள் கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும், எடுத்துச் செல்லப்பட்ட உபகரணங்கள் எதுவும் இதுவரை இங்கு கொண்டுவரப்படவில்லை என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிகிச்சை நிலையத்தை இயங்க வைப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் புற்று நோயாளர்கள் எண்ணிக்கையை குறைக்கமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தென்மராட்சியில் திருடப்பட்ட பொருள்கள் யாழ். நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், ஏப் 30

தென்மராட்சிப் பகுதி வீடுகளில் இருந்து திருடிவரப்பட்ட ஒரு தொகுதி பொருள்களை கோப்பாய்ப் பொலீஸார் மீட்டுள்ளனர். அந்தப் பொருள் அடையாளம் காணும் பொருட்டு யாழ். நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சைக்கிள் ஒன்று, தையல் இயந்திரம் ஆகியன உட்பட வீட்டுப் பாவனைப் பொருள்களே யாழ். நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டவை ஆகும்.

இந்த பொருள்களை உரியவர்கள் அடையாளம் காட்டும் பட்சத்தில் அவர்களிடம் கையளிக்கப்படும் என்றும் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-6-4-117)

## பனங்கட்டித் தொழிற்சாலை இணுவிலில் நிறுவ ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பனங்கட்டி உற்பத்தி நிலையம் ஒன்றை இணுவிலில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பனங்கட்டித் தொழிற்சாலைக்குரிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பனை அபிவிருத்திச் சபையே வழங்கவுள்ளதாகவும், இதற்கென 2 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மிக விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கும் இந்தப் பனங்கட்டி உற்பத்தி வெற்றியளிக்கும் பட்சத்தில் ஏனைய சங்கங்களும் இவ்வாறான உற்பத்தி நிலையங்களை அமைக்கும் என பனை அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க-4)

## இரவில் தொடரும் திருட்டுக்கள்

வட்டுக்கோட்டைப் பகுதியில் இரவு நேரத் திருட்டுக்கள் தொடர்கின்றன.

வட்டுக்கோட்டைப் பிளவத்தையில் ஒரே இரவில் மூன்று வீடுகளில் திருடர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். ஒரு வீட்டில்பெண்ணின் சங்கிலியும், மற்றைய வீட்டில் இரண்டு பெண்களின் (தாய், மகள்) சங்கிலிகளும் அறுக்கப்பட்டுள்ளன. இன்னும் ஒரு வீட்டில் சைக்கிள் திருட்டுப் போயுள்ளது.

மற்றொரு நாள் ஒரு வீட்டின் ஜன்னல் கம்பியை வளைத்து உடைத்து நுழைந்த திருடர்கள் அங்கே 'சூட்கேஸில்' இருந்த 7 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தைத் திருடிச்சென்றுள்ளனர். அத்துடன் அந்த வீட்டில் குடித்து விட்டு அரைவாசி இருந்த சோடாப்போத்தலையும் அவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். (க-15)

உதயன்

## மனமாற்றம் வருமா, என்ன?

விடுதலைப் புலிகளின் நான்கு மாதப் போர்நிறுத்தம் முடிந்த ஒரு சிலமணி நேரத்தில் அரசாங்கப் படையினர் "அக்கினிச் சுவாலை" என்ற இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர்.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் எழுதியிருந்தது போல, ஆனையிறவைத் தம்வசம் கொண்டு வந்த பின்னரே சமாதானப் பேச்சுவார்த்தை என்ற அரச தரப்பின் ஒருவருடக் "கோட்பாட்டின்" செயல் வடிவம்தான் - அதன் ஆரம்பமே - "அக்கினிச் சுவாலை"

சமாதானமும் சண்டையும் ஒரு தட்டில் வைக்கக்கூடியவையல்ல; எதிரும் புதிருமானவை. ஆனால் சந்திரிகா அரசு கடந்த ஆறுவருடங்களாக தாம் நடத்தி வரும் சண்டைக்கு "சமாதானத்துக்கான போர்" என்று புனுகு பூசியிருந்தது.

போரினால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்று வாய் குழையக் கூறுபவர்களும் அரச தரப்பினரே. ஆனால் அதனைக் கைவிட மனமில்லாமல், நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகளைத் தொடங்கிய பின்னரும் போரை நடத்துவதிலேயே அரசு அக்கறையாக உள்ளது.

ஜனாதிபதி உட்பட அரச தரப்பார் போர் குறித்தும் சமாதான முயற்சிகள் குறித்தும், தீர்வு காண்பது குறித்தும் தெரிவிக்கும் கருத்துகளும் தகவல்களும் சாதாரண பிரசைகளுக்கு விசித்திரமானவையாகவே தெரிகின்றன. இந்த விசித்திரத் தொடரின் ஓர் அங்கமே விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தம் முடிந்த கையோடு அரசாங்கப் படைகள் ஆரம்பித்த "அக்கினிச் சுவாலை".

அரசாங்க "வெப்" தளத்துக்கு ஜனாதிபதி சந்திகா அளித்த செவ்வியில், சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிக்கும் போர்நிறுத்தத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று "மிகுந்த புத்தி சாதுரியமாகத்" தெரிவித்திருந்தார். அதாவது பொதுவான கருத்து நிலை ஒன்றாக இருக்க, அரசாங்கத்துக்கென புறம்பான கருத்து - விசித்திரமான கருத்து - உண்டென்று அவர் மீண்டும் அடித்துக் கூறியிருக்கிறார்.

"சமாதானத்துக்கான போர்" என்ற முந்திய கேலித்தனமான சித்தாந்தத்தினை தெரிந்தும் தெரியாதது போல் சர்வதேச உலகம் கண்டிக்காதிருந்தது. அதற்கும் மேலாக இலங்கை அரசுக்கு பல்வேறு வகைகளிலும் உதவி செய்து வந்தது. ஆயுத தளபாட உதவிகளையும் வழங்கியது.

இதனால் தனது விசித்திரமான கருத்துக்களை வெளியுலகம் அங்கீகரித்தது; ஏற்றுக்கொண்டது என்ற எண்ணத்துடன் இப்போதைய கருத்து நிலைக்கு வந்துள்ளது. போரை நடத்தி தமிழர் பிரதேசத்தை சிதைத்துச் சீரழித்துக்கொண்டு, சமாதானப் பேச்சுக்களையும் நடத்தப்போவதாகக் கூறுகின்றது!

சமாதான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே வெளிநாடுகள் இராணுவ உதவிகளையும் நிதி உதவிகளையும் தாராளமாக வழங்கி வருவதால் அரசாங்கம் தனது இரட்டைத் தனத்தை மிகத் துணிவுடன் காண்பித்து வருகிறது.

உலக நாடுகளிடமிருந்து போதிய நிதி உதவிகளைப் பெற்றுவிட்டதால், இனி அடுத்த வருடம்தானே, அப்போது சமாளித்துக்கொள்ளலாம் என்ற அதீத நம்பிக்கை, போரைக் கைவிடாத அரசின் கடினப் போக்குக்கு ஒரு காரணம்.

"அக்கினிச் சுவாலை" இராணுவ நடவடிக்கை, நிச்சயமாக நான்கு மாதங்களாக திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்ட ஒன்றாகவே இருக்கும். அது காற்றுமாறி பின்பக்கமாக வீசி தணிந்து - நூர்ந்து - போயிருக்கிறது.

முதற் கோணின் முற்றும் கோணும் என்று எண்ணியாவது, போர்ச் சிந்தனையைக் கைவிட்டு, சமாதான முயற்சியில் முழு மனதுடன் அரசு ஈடுபடும் என்று நம்பமுடியவில்லை. அரசுக்கு மனமாற்றம் வரும் என்று நினைக்க ஏது இல்லை. திடீரென இன்றே அடுத்த இராணுவ நடவடிக்கை ஆரம்பமானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! எல்லாம் அரசே அறியும்!!

# தீர்வு விடயத்தில் அரசாங்கம் ஆடியது கபட நாடகமே!

## 'அக்கினிச் சுவாலை' குறித்து சந்திரசேகரன்

கொழும்பு,ஏப்.30

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் மிகுந்த நேர்மையுடனும், பொறுப்புணர்வோடும் நடந்துள்ளனர். ஆனால் அரசாங்கமோ இந்த விடயத்தில் உலகை ஏமாற்றும் நாடகமே ஆடியுள்ளதாக எண்ணத்தோன்றுகிறது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி.சந்திரசேகரன் 'அக்கினிச் சுவாலை-1' இராணுவ நடவடிக்கை குறித்து வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அக்கினிச் சுவாலை படை நகர்வின் போது 400க்கும் அதிகமானோர் பலியாகியும், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்த அனர்த்தத்துக்கும் இலங்கை அரசாங்கமே முழு பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

அரசாங்கம் இதேபோன்ற போக்கைத் தொடர்ந்தும் கடைப்பிடித்தால் உலக நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளை நியாயப்படுத்துகின்ற நிலை நிச்சயம் ஏற்படும்.

தற்போதைய அநியாய உயிரிழப்புக்களைத் தவிர்த்துக்கொள்ளும் விதத்தில் அரசாங்கம் யுத்தநிறுத்தம் செய்து பேச்சுவார்த்தையைத் தொடங்கவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி வலியுறுத்துகின்றது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் சமாதானத்தின் பக்கம் கபடத்தனம் இல்லாமல் சரியான நிலைப்பாட்டை அரசாங்கம் எடுக்கவில்லை என்றும் - அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7)

# யாழ்.கல்வியியற் கல்லூரி ஓராண்டு பூர்த்தி விழா

## 16, 17, 18ஆம் திகதிகளில் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற கல்லூரியின் ஓராண்டு பூர்த்தி விழா எதிர்வரும் 15 ஆம் திகதி கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம விருந்தினராகக் கல்வி அமைச்சின் கல்விக் கல்லூரிகளுக்குப் பொறுப்பான ஆணையாளர் நிஹால் ஹேரத்தும் சிறப்பு விருந்தினராக தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப்பான திருமதி.எஸ். இராமகிருஷ்ணனும் கலந்து கொள்ள உள்ளனர்.

அன்றைய தினம் "முருகு" என்ற கல்வியியற் கல்லூரியின் ஓராண்டு பூர்த்தி விழா மலர் வெளியீடும் இடம்பெற உள்ளது. தொடர்ந்து 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான கல்வியியற் கண்காட்சியும் கல்லூரியில் நடைபெற உள்ளது.

யாழ் மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இக்கண்காட்சியைப் பார்வையிட்டு பயன்பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு நாளை மறுதினம் புதன் கிழமை கல்லூரியில் சமய விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கடந்த ஆண்டு மே மாதம் 2ஆம திகதி கல்வியியற் கல்லூரி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டமை தெரிந்ததே.

(க-73)

## கோவைகளில் ஆவணங்கள் இல்லை:

# யாழ்.மாநகர சபை ஊழியர்களின் அக்கறையீனம் குறித்து அதிருப்தி

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.மாநகரசபையில் கடமையாற்றும் 75 வீதமான ஊழியர்களின் தனிப்பட்ட கோவைகளில் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லை என்று சபை அதிகாரி ஒருவர் சுட்டிக் காட்டினார்.

இந்தக் கோவைகளில் ஊழியர்களின் பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் திருமணச் சான்றிதழ்கள், அவர்களது பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள் இருக்கவேண்டியது அவசியமாகிறது என்றும் பல கோவைகளில் இவை எதனையும் காண முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊழியர்களுக்கு பல தடவைகள் சுட்டிக்காட்டியும் அவர்கள் அக்கறையின்றி இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்ட ஊழியர்கள் ஓய்வூதிய வயதை அடையும் போது இந்த ஆவணங்கள் இல்லாது விட்டால் ஓய்வூதியம் பெறுவதற்குச் சிரமப்பட நேரிடும் என்றும் அவர் கூறினார்.

சபை அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்காகச் சில ஊழியர்கள் தமது கோவைகளில் வைப்பதற்காக போலிச் சான்றிதழ்களை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஜேர்மன் நிறுவன உதவியுடன் வலிகாமம் மேற்கில் 25 வீடுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.30

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனத்தின் உதவியுடன் மேலும் 25 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

மேற்படி வீடுகளை அமைப்பதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் ஏற்கனவே வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிகவும் வறுமை நிலையிலுள்ள பெண்களைத் தலைவராகக் கொண்ட 25 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இவ்வீடுகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்படவிருக்கும் கட்டடப் பொருள்களைப் பயன்படுத்தி வீடுகளை நிர்மாணிக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஐ-99)

## நாளை

சித்திரை 18
செவ்வாய்க்கிழமை
திதி: அட்டமி
முற்பகல் : 9.12 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
முன்னிரவு : 8.54 வரை.
மேதினம்
சுபநேரம் : 10.27 - 11.57
ராகுகாலம் : 2.57 - 4.27
(பழைய நேரப்படி)


## தரம் 9 பொதுப் பரீட்சை

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தரம் 9இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான மாகாண மட்ட பொதுப் பரீட்சையை இவ்வருடம் நடத்த கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ-152)

## உதயவாக்கு

ஓய்வு ஓர் அழகான ஆடை; ஆனால் அது இடைவிடாமல் அணியத்தக்கதன்று.

# கல்விச்சாலைக் காட்சிகள்



கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் நிதி உதவியுடன் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சிறுவர்களுக்கு சத்துணவு - பால்மா வழங்கி வருகிறது.

துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா, கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் ஆகியோர் சிறுவர்களுக்குப் பால் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



கோண்டாவில் இந்து மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட எஸ்.பி.சிவஞானம் (சட்டத்தரணி), திருமதி சிவஞானம், சிறப்பு விருந்தினர்களான டாக்டர் திருமதி யாழினி யோகேஸ்வரன், மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராஜா ஆகியோரை வித்தியாலய அதிபர் செல்வி பா.மார்க்கண்டு மைதானத்துக்கு அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம். (ஐ-7)



புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பழைய மாணவரும் கரவெட்டி பிரதேச செயலருமான செ. ஸ்ரீநிவாசன் போட்டியில் வெற்றியீட்டிய மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-118)



பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை பரிசளிப்பு விழா கடந்த மாதம் நடைபெற்றது.

வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் விழாவில் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப உத்தியோகத்தர் பா. தியோனிஸ், க.சுந்தரசிவம், உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா ஆகியோரையும் படத்தில் காணலாம். (ஐ)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 09 - 06 - 1919

மறைவு 31 - 03 - 2001

## திருமதி செல்வநாயகி திருநாவுக்கரசு


எமது குடும்பத்தின் குலவிளக்கே!
தீபம் அணைந்தாலும் எமது மனங்களில்
என்றென்றும் நினைவில்
ஒளி வீசிக் கொண்டேயிருப்பீர்கள்!

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டவுடன் ஓடோடி வந்து ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து எமது துயரில் பங்குகொண்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் எம்முடன் துயர் பகிர்ந்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு இன்று (30-04-2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

**திரு.திருமதி தி.நாகரத்தினம்** (மகன், மருமகள்)
(உரிமையாளர், சாந்தி அச்சகம் நாச்சிமார் கோயிலடி)
**திரு. திருமதி சி.ஈஸ்வரலிங்கம்** (மருமகன், மகள்)
(உரிமையாளர், சாயிபாபா களஞ்சியம், நல்லூர்)
**மற்றும் மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

*விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு.* (87225)

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 - 06 - 1927

மறைவு 10 - 05 - 2000

அமரர்

## அருணாசலம் குமாரவேலு

(இளைப்பாறிய அதிபர்) மட்டுவில் வடக்கு

**திதி நாள்: 30.04.2001**

**கல்வி உமது கருத்தன்றோ!**
**கருணை உமது உருவமன்றோ!**
**நல் ஒழுக்கம் உமது நடையன்றோ!**
**நானிலம் போற்றும் குணமன்றோ!**
**செல்வம் உமது சொத்தன்றோ - எனினும்**
**செருக்கின்மை உமது வாழ்வன்றோ!**
**சொல்லும் செயலும் ஒன்றல்லோ - நீர்**
**சொல்லாமற் சென்றது வியப்பன்றோ!**

" ஆத்மசாந்திக்கு எம் அஞ்சலிகள் "

இன்று (30.04.2001) திங்கட்கிழமை முற்பகல் 11மணியளவில் நடைபெறும் எமது குடும்பத்தலைவரின் முதலாவது ஆண்டு சிரார்த்ததின அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்காலிக முகவரி:*
**மே/பா. ஆர்.நடராசா,**
*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.* (87008)

## காயமுற்ற படையினரை பார்வையிட்டார் அமைச்சர்

யாழ்ப்பாணம்,ஏப்.30

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 400க்கும் மேற்பட்ட காயமடைந்த படையினரை சனிக்கிழமை சுகாதார அமைச்சர் ஜோன் செனிவிரத்ன சென்று பார்வையிட்டார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள படையினருக்குத் தேவையான சகல உதவிகளையும் உடனடியாக வழங்குமாறு பணித்த அவர் இரத்ததானம் செய்யுமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை -

படையினருக்குத் தேவையான சகல மருந்து வகைகளையும் சுகாதார அமைச்சு வழங்கிவருகின்றது. (க-6)

## வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்ப முண்டியடிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ். நகரப் பகுதியில்உள்ள 'மாக்பெட்' எரிபொருள் விற்பனை நிலையத்தில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் கடந்த சனிக்கிழமை அதிக அளவிலான வாகனங்கள் வரிசையாக நின்று பெற்றோலை நிரப்பிச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

கடந்த ஓரிரு தினங்களாக குடாநாட்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று ஊகித்தே வாகனங்களின் சொந்தக்காரர்கள் எரிபொருள்களை நிரப்புவதற்கு முண்டியடித்தனர். (க-10)

## சைக்கிள் திருடிய நபருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம்,ஏப்.30

வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த 'லேடிஸ் சைக்கிள்' ஒன்றை திருட்டுத்தனமாக உருட்டிச்சென்ற சந்தேக நபர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆஜர் செய்யப்பட்டார்.

அன்ரன் ஜேசுதாஸ் (சென். பற்றிக்ஸ் வீதி - யாழ்ப்பாணம்) என்பவரே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேகநபரை எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (க-5)

## கோப்பாய் கலாசாலை பயிற்சி ஆசிரியரின் மூலச் சான்றிதழ்கள்

காரைநகர்,ஏப்.30

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 1992ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இறுதி ஆண்டுப் பரீட்சைக்கு கோப்பாய ஆசிரிய கலாசாலையில் இருந்து தோற்றியோரது பெறுபேற்று மூலச் சான்றிதழ்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வந்து சேர்ந்துள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் சான்றிதழ்களை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் கலாசாலைக்குச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளமாறு கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி அறிவித்துள்ளார். (க-73)

## மலசலகூடங்கள் அமைத்துத்தர நடவடிக்கை

மூளாய்,ஏப்.30

யுனிசெவ் நிறுவனம் வலிகாமம் மேற்கில் மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இதற்கென மிகவும் பின்தங்கிய கிராமங்களைச்சேர்ந்த வறுமை நிலையில உள்ளதும் - சிறுவர்களை அதிக எண்ணிக்கையில் கொண்டதுமான சுமார் 20 குடும்பங்கள் தெரிவு செய்யப்படும்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதறகான ஆரம்ப ஏற்பாடுகளை வலி.மேற்குப் பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது. (க-7-99)

## எழுவைதீவில் வறிய குடும்பங்களுக்கு வீடுகள்

ஊர்காவற்றுறை,ஏப்.30

எழுவைதீவில் போரூட் நிறுவனத்தின் உதவியுடன் மிகவும் வறிய நிலையில் உள்ள 21 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 30 ஆயிரம் ரூபா போரூட் நிறுவனத்தால் வழங்கப்படும். (க-7-16)

# வாழ்த்துகின்றோம்

பலாலி
ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
விரிவுரையாளர்

## திரு. M. இக்னேசியஸ்

**B.A. (HONS), Dip in Edu.**



**கல்வி நிர்வாக சேவை (SLEAS) தரம் III இற்கு தெரிவு செய்யப்பட்டமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

- விரிவுரையாள நண்பர்கள்,
**யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.**

(87221)

# UNIVERSITY OF JAFFNA, SRILANKA

## TENDER NOTICE

**The Chairman, Tender board, University of Jaffna will receive sealed tenders from suitable contractors to carry out;**

**Termite proofing Arts Block - IV**

**Tender forms may be obtained from Works Engineer (Civil), University of Jaffna until 10.05.2001 on cash payment of the followingtender fees at the Shroff's counter of University of Jaffna.**

**01. Refundable deposit - Rs. 5000/00**
**02. Non-refundable deposit - Rs.500/00**

**Tenderers should produce documents to show proof to their capability in termite proofing/pest control.**

**Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's office, University of Jaffna on or before 22.05.2001 at 10.00 a.m.**

**Any further details may be obtained from Works Engineer (Civil), University of Jaffna (Tel : 021-2483 Ext. 211) during office hours.**

**University of Jaffna.**
**P.O. Box 57,**
**Thirunelvely,**
**Jaffna.**

(C/16488)

**Registrar.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலசிங்கம் பரமேஸ்வரி

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும்கொண்ட திருமதி பாலசிங்கம் பரமேஸ்வரி (27.04.2001) வெள்ளிக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - தங்கம்மாவின் மகளும், கார்த்திகேசு - அன்னம்மா ஆகியோரின் மருமகளும், குகதாஸ் (கனடா), பிரேமதாஸ் (கொழும்பு), பாலதாஸ் (சுவிஸ்) அருள்தாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மீனலோஜினி (கனடா), அருந்ததி (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், தேவசகாயம், இராசஇராஜேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற ஞானேஸ்வரி மற்றும் கனகலிங்கம், சத்தியசீலன் (ஆயுள்வேத வைத்தியர்), மகேஸ்வரன், மகேந்திரன் (கனடா), சகுந்தலாதேவி (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்லையா, நாகரட்ணம், முத்துராசா மற்றும் குமாரசுவாமி, நவரட்ணம் (சிறுக்கு), காலஞ்சென்ற மகேஸ்வரி - கந்தவனம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.04.2001) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செம்பாட்டு லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(87222)

*தகவல்:-*
ந.மகேஸ்வரன்.
(சகோதரன்)

## இசைமணி கணபதிப்பிள்ளை துரைராசா

*(சங்கீத ஆசிரியர்)*

மாதனை, பருத்தித்துறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை துரைராசா நேற்று முன்தினம் (28.04.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், அகிலேஸ்வரி (கொழும்பு), கல்யாணி (பிரான்ஸ்), கேதீஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (29.04.2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*மாதனை,*
*பருத்தித்துறை.*
(87226)

*தகவல்:-*
சரஸ்வதி,
(மனைவி)

# ஆங்கில மொழி மூலக் கல்வி போதனை சுதேசிய கல்விக் கொள்கைக்குக் குந்தகம்!

**ஆங்கிலத்தைப் போதனா மொழியாக்கும் விடயம் தொடர்பாக சாதக, பாதக கருத்துக்கள் நிலவுகின்றன. இவ்விடயம் தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் ரன்ஜித் ருபேரு அவர்களின் கருத்து 'லங்கா தீப' ஞாயிறு இதழில் வெளியானது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

அரசாங்கப் பாடசாலைகளில் போதிக்கப்படும் அனைத்துப் பாடங்களையும் ஆங்கில மொழியில் போதிப்பது தொடர்பான திட்டமொன்றை அரசு முன்வைத்துள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன தொடக்கமாக ஒரு சில அரசாங்கப் பாடசாலைகளில் கற்கும் ஜீ.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கு 2001ஆம் ஆண்டின் முற்பகுதியில் இருந்து ஆங்கில மொழி மூலம் போதனைகள் மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றன.

ஆங்கில மொழியைப் போதனா மொழியாகப் பயன்படுத்துவது எவ்வளவு தூரம், எவ்விதத்தில் பொருத்தமானது என்பது குறித்தும் அது தற்போது நடைமுறையில் உள்ள தாய்மொழி மூலமாகப் போதனைகளை மேற்கொள்ளும் தேசியக் கல்விக் கொள்கைக்கு ஊறு விளைவிக்காதா என்பது குறித்தும் ஆராய்வது மிகவும் முக்கியமானது.

சிறிலங்காவில் உள்ள பாடசாலைகளில் போதனா மொழியாக ஆங்கில மொழியை அறிமுகப்படுத்துவது என்ற கருத்து நீண்ட காலமாகவே நிலவி வந்துள்ளது. சிறிலங்கா பிரித்தானியாவின் ஆளுகையின் கீழ் இருந்த காரணத்தாலேயே, அக்காலத்திலேயே இந்தக் கருத்து ஆரம்பமானது. அதுவரை காலமும் நடைமுறைப்படுத்தப்பட்ட சுதேசக் கல்வி முறையின்படி மாணவர்களின் தாய்மொழிகளான சிங்களம் மற்றும் தமிழ மொழிகளில் போதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்பது தெளிவு. சிங்களப் பிரதேசங்களில் சிங்கள மொழியும் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மொழியும் போதனாமொழிகளாக விளங்கியதுடன் இந்நாடு பிரித்தானியாவின் ஆளுகைக்கு உட்பட்ட பின்னர் ஆங்கில மொழி போதனா மொழியாகியது. பிரித்தானியாவின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் ஆட்சியாளர்களின் மொழியான ஆங்கில மொழி போதனா மொழியாக மாத்திரமன்றி அது அரச மொழயாகவும் (நிர்வாக மொழியாகவும்) விளங்கியது. இது சிறிலங்காவில் மாத்திரம் நடைமுறைபடுத்தப்படவில்லை. பிரித்தானியாவின் ஆட்சிக்குட்பட்டிருந்த அனைத்து நாடுகளிலும் அதன் வசதிக்கான மொழிக் கொள்கையாக இருந்தது. இருப்பினும் சுதந்திரம் கிடைத்து அரை நூற்றாண்டுகளுக்குப் பின்னர் நவீன சிறிலங்காவில் பாடசாலைகளில் போதனா மொழியாக ஆங்கில மொழியை ஆக்குவது தேவையற்றது மாத்திரமன்றி மீண்டும் ஆங்கில மொழிக்குச் செல்வது புத்திசாதுரியமானது என்பதற்கு சாதகமான காரணிகள் இல்லை என்றே கூறவேண்டும். அவ்வாறு மேற்கொள்வது தூரதரிசனமற்ற - தேசிய உணர்வுகளைப் பாதிக்கும் - செயலாக அமையும்.

சிறிலங்காவில் உள்ள பாடசாலைகளில் போதனாமொழிகளாக சிங்களமும் தமிழும் இருக்கவேண்டும் என்பது நாடு சுதந்திரமடைவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயமாகும். தமிழ்மொழி மூலமான போதனைகளுக்கான சட்டபூர்வமான ஒழுங்குகள் 1940 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறான மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுவதற்கு முக்கிய காரணம் ஒன்று இருந்தது. அதாவது ஒரு குழந்தையானது தனது தாய் மொழி மூலமாக மாத்திரமே சிறந்த கல்வியைப் பெற முடியும் என்ற விஞ்ஞான ரீதியான கருத்து அக்காலத்தில் உலகில் உள்ள அனைத்து நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கல்வியை வழங்குவதற்கு மிகவும் பொருத்தமான மொழி அவரவரது தாய்மொழி மாத்திரமே என்பது இற்றைக்கு 50 வருடங்களுக்கு முனனதாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## தாய்மொழி மூல போதனையின் முக்கியத்துவம்

சிங்கள மாணவர்களுக்கு அவர்களது தாய்மொழியான சிங்கள மொழியும் தமிழ் மாணவர்களுக்கு அவர்களது தாய்மொழியான தமிழ் மொழியும் பாடசாலைகளில் போதனா மொழிகளாக ஆக்கப்பட்டன. உலகம் ஏற்றுக் கொண்ட - உலகம் நம்பிக்கை வைத்த - தாய்மொழி மூலமான போதனையின் முக்கியத்துவத்தின் காராணத்தாலேயாகும்.

வெளிநாட்டு ஆட்சியாளர்களின் அழுத்தங்கள் காரணமாக வெளிநாட்டு மொழி ஒன்று போதனா மொழியாக ஆக்கப்பட்ட அனைத்து நாடுகளும் தாங்கள் அரசியல் சுதந்திரத்தைப் பெற்று சுதந்திர ஆட்சியை அமைத்த பின்னர் உடனடியாக தத்தமது நாடுகளில் வழங்கி வந்த தாய்மொழிகளைப் போதனா மொழியாக்கும் திடீர் கல்விக் கொள்கைகளைப் பின்பற்றின. இந்த நடவடிக்கை பிரித்தானிய ஆட்சியின் கீழ் இந்நாடு இருந்த போதே, அதாவது 1944ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது முக்கியமான சம்பவம் ஆகும். இந்நாட்டுச் சிறுவர்கள் தங்களது தாய்மொழியிலேயே கல்வியைப் பெறும் இந்த வாய்ப்பை அபகரிக்கும் உரிமை எவருக்கும் இல்லை என்றே கூற வேண்டும். மேலும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் முயற்சியானது நாட்டில் நடைமுறையிலுள்ள தேசிய கல்விக் கொள்கைக்கு முரணானதாக அமையும். உலகில் எந்தவொரு நாட்டிலும இவ்வாறான சம்பவம் இடம்பெறாது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.




ஆங்கில மொழியைப் போதனா மொழியாக ஆக்கும் முயற்சியின் முதற்படியாக ஜீ.சீ.ஈ. உயர்தர வகுப்புக்குரிய அனைத்துப் பாடங்களும் இவ்வாண்டு (2001) தொடக்கம் ஆங்கில மொழி மூலமாகப் போதிக்கும் நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளது எனவும் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் ஒன்றில் இருந்து இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதமான போதனாமொழியை மாற்றுவது அலலது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்குப் பதிலாக ஆங்கில மொழியை மாற்றும் சூழ்நிலையில் உயர் வகுப்பு மாணவர்களில் ஆங்கிலம் தெரிந்தோர் அதிக எண்ணிக்கையில் உள்ளனரா என்பது பற்றி ஆராய வேண்டியது முக்கியம். ஆரம்பப் பாடசாலைகளில் இருந்து தாய்மொழி மூலமாகக் கல்வியைப் பெற்று - போதுமான அளவு ஆங்கில மொழி அறிவு இல்லாது - இன்று பாடசாலைகளில் பயின்று வரும் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு இதனால் பாதிப்பு கள் ஏற்படுமே தவிர பயனேதும் கிட்டமாட்டாது. இந்நிலைமையால் குறிப்பாகக் கிராமப் புறங்களில் வாழும ஏழை மற்றும் வசதிகள் பெறாத - அதேநேரம் கல்வியில் திறமை மிக்க மாணவர்களே பாதிப்படைவார்கள். அவர்களது கல்வி அபிலாசைகள் இதனால் பாதிககப்படக் கூடும்.

## மாணவரின் அச்ச உணர்வு

இங்கு உருவாகக் கூடிய பாரிய பிரச்சினைகள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். முன்னர் குறிப்பிட்டவாறு ஆரம்பத்தில் இருந்தே தங்கள் பாடசாலைக் கல்வியை தமது தாய்மொழி மூலம் ஜீ.சீ.ஈ. உயர்தரம் வரை கற்ற மாணவர் ஒருவருக்குத் திடீரெனப் போதனா மொழியை ஆங்கிலமாக மாற்றும் போது உருவாகக் கூடிய அச்ச உணர்வு குறித்து இந்தத் திட்டத்தை முன்வைத்தவர்கள் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. ஒரு சில மாணவர்கள் தங்களுக்கு ஆங்கில மொழியில் தேர்ச்சி உள்ளது எனத் தெரிவித்தாலும் சுமார் அரை நூற்றாண்டு காலமாக மிகவும் சீராகப் பயன்படுத்தி வந்த தாய்மொழிக்குப் பதிலாகத் திடீரென ஆங்கில மொழியைப் பயன்படுத்தினால் பெரும எண்ணிக்கையிலான மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும். ஒரு வேளை இந்த நடவடிக்கையானது கிராமப்புற மாணவர்களின் கல்வியைப் பாழடிக்கத் தீட்டப்பட்ட திட்டமோ என்ற சந்தேகம் எழுகிறது.

சிறிலங்காவில் உள்ள பாடசாலைகளில் இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தைப் போதிக்கும் முறை தோல்வி அடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். பாடசாலைகளில் வழங்கப்படும் ஆங்கில அறிவைப் பயன்படுத்தி ஆங்கில மொழியைக் கையாளும் ஆற்றல் வெகு சிலருக்கே உண்டு என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். பாடசாலைக் கல்வியை ஆங்கிலமொழி மூலம் போதிக்க எண்ணினால் ஆங்கிலமே போதனாமொழி என்பதைக் கொள்கை ரீதியாக வெளியிட்டு நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலத்தைப் போதனாமொழியாக ஆரம்பித்துப் படிப்படியாக ஆண்டுதோறும் உயர் வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தவேண்டும். அவ்வாறு நடைமுறைப்படுத்தும் போது தற்போது தாய்மொழி மூலமாகக் கல்விபெறும் எந்தவொரு மாணவருக்கும் பாதிப்பு ஏற்படாத விதத்தில் போதனா மொழியாக ஆங்கிலத்தை மாற்ற முடியும். இருப்பினும் தற்போது பின்பற்றப்படும் தாய்மொழி மூலமான போதனை என்ற கொள்கைக்கு இது முரண்பட்ட கொள்கையாக அமைவதுடன் அவ்வாறான திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது உருவாகும் தடைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாமற்போகும்.

## ஆசிரியரின் ஆங்கில அறிவு

விசேட ஆங்கில மொழி ஆசிரியர்கள் தவிர சேவையிலுள்ள ஏனைய ஆசிரியர்கள் அனைவரும் தத்தமது கல்வியையும் பயிற்சியையும் தாய்மொழி மூலம் பெற்றதால் அவர்களுக்குள்ள ஆங்கில அறிவும் ஆங்கில மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலும் அற்பமாகவே உள்ளன. அவ்வாறான ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி மூலமாகப் போதிக்கும் ஆற்றல் சிறிதும் இல்லை. இவ்வாறான ஆசிரியர்களுக்கு குறுகிய காலப் பயிற்சிகளை வழங்கி அவர்களை ஆங்கில ஆசிரியர்களாக்க முயற்சிதால் அது ஒரு போதும் பயன்தர மாட்டாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் சிலவற்றில் ஆங்கில மொழி மூலம் போதனைகளை மேற்கொள்ள 72 பாடசாலைகளைச் சேர்ந்த 300 ஆசிரியர்களை ஈடுபடுத்தவுள்ளதாக கல்வி அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்கு இரு கேள்விகள் எழுகின்றன.

இந்த வரையறுக்கப்பட்ட பாடசாலைகள் சிலவற்றில் இருந்து ஆங்கில மொழியைப் போதிக்கும் ஆற்றலுள்ள ஆசிரியர்கள் எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் என்ன அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்ற கேள்வி எழுகின்றது. நாட்டில் சுமார் 10 ஆயிரம் பாடசாலைகள் உள்ளன. இவற்றிலிருந்து 72 பாடசாலைகள் மட்டும் என்ன அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதைத் தெளிவாக்க வேண்டும். மேலும் சேவையிலுள்ள 90 ஆயிரம் ஆசிரியர்களில் 300 ஆசிரியர்களைத தேர்ந்தெடுப்பது சுலபமான பணியும் அல்ல. இவ்விடயங்கள் குறித்து தெளிவுபடுத்துவது முக்கியமானதாகும்.

## கல்விக் கொள்கைக்கு விரோதம்

அரச பாடசாலைகளில் சுதந்திரமான கல்வியே வழங்கப்படுகிறது. இதற்கு பொதுமக்களின் நிதியே செலவிடப்படுகிறது. அப்பாடசாலைகளில் மாணவர்களின் தாய்மொழியே பயன்படுத்தப்படுவதால், தாய்மொழி மூலமான கல்வியே வழங்கப்படுகிறது. நிலைமை இவ்வாறு இருக்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் ஒரு சிலவற்றைத் தேர்ந்தெடுத்து சிறு எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு ஆங்கிலமொழி மூலமாக போதனைகளை வழங்க எடுக்கப்படும் முயற்சிகளை நேர்மையான முயற்சிகள் என ஒரு போதும் கூற முடியாது. மேலும் இது நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய கல்விக் கொள்கைக்கு நேர்மாறான கொள்கையாகும் சிறு எண்ணிக்கையிலானோருக்கு ஆங்கிலமொழி மூலம் போதனைகளை வழங்கிவிட்டு பெரும் எண்ணிக்கையானோருக்கு தாய்மொழி மூலக் கல்வியை வழங்குவது ஒன்றுக்கொன்று முரண்பட்ட கலவிக் கொள்கை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இங்கு மற்றொரு பிரச்சினை எழுகிறது. அதாவது தற்போது சேவையிலுள்ள ஆசிரியர்கள் ஆங்கில மொழி மூலம் போதிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறதா? ஆங்கில மொழி மூலம் போதிக்கும் ஆற்றல் இல்லாத ஆசிரியர்களை ஓய்வூதியம் பெறுமாறு பணித்து, அவர்களுக்குப் பதிலாக ஆங்கில மொழி மூலம் போதனைகளை மேற்கொள்ள ஆசிரியர்களை நியமனம் செய்வதும முடியாத விடயம். நாட்டின் பொருளாதார நிலையின் படி வெளிநாட்டு ஆசிரியர்களை ஆங்கிலமொழி மூலம் போதிக்க நியமனம் செய்ய முடியாத நிலை உள்ளது. அவ்வாறு நியமனம் செய்ய முடியுமாயினும் அது நகைப்பிற்குரிய விடயமாகும். நவீன தேவைகளுக்கு ஏற்ப ஆங்கில அறிவுடையவர்களை உருவாக்குவது மிகவும் முக்கியமான விடயமாகும். இருப்பினும் திடீரென ஆங்கில மொழி மூலமான போதனைகளை அறிமுகப்படுத்துவது அதற்கு மாற்றுவழியாக ஒரு போதும் அமையாது. மிகவும் பயனளிக்கும் விதத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட தாய்மொழி மூலமான போதனைக் கொள்கையைக் கைவிட்டு ஆங்கில மொழியைப் போதனா மொழியாக்குவது மேலே கூறப்பட்ட காரணங்களின்படி ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரேயொரு வழியே உள்ளது. பாடசாலைகளை விட்டு விலகும் மாணவர்களின் ஆங்கிலமொழி அறிவு மற்றும் அம்மொழியைக் கையாளும் ஆற்றல் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதே அதுவாகும். ஆங்கிலத்தைக் கட்டாயமான இரண்டாவது மொழியாக பாடசாலைகளில் திறம்படப் போதிப்பதே இதற்குப் பரிகாரமாகும். முயற்சியும் வினைத்திறனும் அதிகாரிகளுக்கு இருக்குமேயானால் மிகவும் குறுகியகால எல்லைக்குள் இதைச் செய்து முடிக்கலாம்.

பாடசாலைகளில் நாளாந்தம் உருவாகும் ஆங்கில ஆசிரியர்களின் தட்டுப்பாட்டைப் போக்க உரிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆங்கில ஆசிரியர்களின் தேவை போதுமான அளவிற்குப் பூர்த்தி செயயப்படவில்லை. மேலும் சேவையிலுள்ள ஆங்கில ஆசிரியர்களும் பாடசாலைகளின் தேவைகளுக்குப் பொருத்தமான விதத்தில் ஈடுபடுத்தப்படவில்லை அல்லது பகிர்ந்தளிக்கப்படவில்லை.

நாளாந்தம் பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளின்படி சில பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் தேவைக்கு மேலதிகமாகவும் மற்றும் சில பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களின் தட்டுப்பாடும் நிலவுவதையும் காணமுடிகிறது. அதுமாத்திரமன்றி சில பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடம் உரிய காலத்தில் நிரப்பப்படாததால் ஆண்டுக்கணக்காக ஆங்கில ஆசிரியர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு தினமும் எழுகிறது. இதிலிருந்து இரண்டாவது மொழியாக ஆங்கிலம் பாடசாலைகளில் திறம்பட போதிக்கப்படுவதில்லை என்பது தெளிவாகிறது.

**தமிழில்: - கஜனி**

இவ்வாறு நிலைமை உருவாவதற்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றிற்கு ஏற்ற பரிகாரம் காண அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்துப் பாடசாலைகளிலும் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகப் போதிக்க அதி உச்ச முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய வேளை தற்போது உருவாகியுள்ளது. இவற்றை விடுத்து பாடசாலைகளில் ஆங்கில மொழியைப் போதனா மொழியாக மாற்றுவதால் எதுவித பயனும் கிடைக்கப்போவதில்லை. இவ்வாறு மேற்கொள்வதால் பாடசாலைக் கல்விக்கு எதுவித பயனும் கிட்டப்போவதில்லை. பதிலாக ஆங்கிலத்தைப் போதனா மொழியாக ஆக்குவதால் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் பாடசாலைக் கல்வியை கைவிட நேரிடும். இதனால் கிராமப்புற மாணவர்களே பெருமளவில் பாதிப்படைவர். இன்று தேவைப்படுவது ஆங்கிலத்தைப் போதனாமொழியாக மாற்றுவது அல்ல. பதிலாக பாடசாலையை விட்டுச் செல்லும் மாணவர்களின் ஆங்கில அறிவாற்றலை வளர்ப்பதேயாகும். இது தொடர்பாக பொருத்தமான, செயல்திறன் மிக்க திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டியது முக்கியமானதாகும். இன்று உருவாகியுள்ள ஆங்கில மொழிப் பிரச்சினைக்கு தீர்வாக இது மாத்திரமே உள்ளது.

☆ ☆ ☆ ☆ ☆

# திக்கம் சாராய வடிப்புப் பகுதி கள்ளு இல்லாமல் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

திக்கம் வடிசாலைக்கு ப.தெ.வ.அ.கூ. சங்கங்கள் வழங்கும் கள்ளின் அளவு குறைவாக இருப்பதால் சாராய வடிப்புப் பகுதி ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக மேற்படி வடிசாலையின் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் திக்கம் வடிசாலைக்கு அழைக்கப்பட்டு இது தொடர்பான ஒழுங்குமுறை பற்றி அறிவிக்கப்பட்டபோதும் சங்கங்கள் வடிசாலைக்கு வழங்கும் கள்ளின் அளவு குறைவாக இருப்பதாகவும் தெரிவித்துள்ள அவர் -

பத்திரிகை வாயிலாக கள் ஊற்றப்படுவதாக அறியவருவதால் சகல ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(க-5)

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

30-04-2001



மணிவிழா நாயகர்

## உயர்திரு.சிதம்பரப்பிள்ளை வல்லிபுரம்

(மின் பொறியியலாளர், இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேசம்)

யாழ்மண் பெற்றெடுத்த தவப் புதல்வா!
ஆழ் கடலில் விளைந்த நல் முத்தே!
வல்லிபுர ஆழ்வானின் அன்பில் திளைத்தவனே!
நல்லிதயம் படைத்த அன்புச் செம்மலே!
இன்று நீ அகவை அறுபது நிறைத்தாய்!
அறுபது அல்ல ஆண்டு நூறு கண்டு
நிறைவுடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்!

யாழ்.பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

(87128)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிபர், யா/கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை

## செல்வி பாலாம்பிகை கந்தசாமி

B.A.(Geog.Spl.) Dip.in.Ed.M.A.(Ed.)

பாடசாலை வளர்ச்சி, கல்வி வளர்ச்சி என்பனவற்றுக்காக அரும்பணியாற்றிய எமது அதிபர் இலங்கை அதிபர் சேவை தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மேலும் அவர் பணிகள் சிறப்புறவும் பல வளங்களும் பெற்றுப் பல்லாண்டு வாழவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை.

(C/16476)

## நன்றி செலுத்தும் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,ஏப்.30

கல்விமான் கே.பூரணம்பிள்ளையின் அர்ப்பணிப்புகளுக்கு நன்றி செலுத்தும் பிரார்த்தனை இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பருத்தித்துறைத் திருச்சபை ஆலயத்தில் வணபிதா ஜி. அன்ரனி சதீஸ் தலைமையில் நடைபெற உள்ளது. (ம)

## 1581 நீரிறைக்கும் இயந்திரங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

'சீடா' திட்டத்தின் கீழ் யாழ்மாவட்டத்தில் இதுவரை ஆயிரத்து 581 நீரிறைக்கும் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் மட்டுமே 'சஜிந்த' கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட 250 நீரிறைக்கும் இயந்திரங்களும் நல்லூர், தொல்புரம், வேலணை, கீரிமலை, உரும்பிராய், அம்பன், உடுவில், புத்தூர், புலோலி போன்ற இடங்களில் உள்ள கமநல கேந்திர நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக கமநல சேவைகள் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-5)

## சைக்கிள் திருடர் இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஏப்.30

சைக்கிள் திருட்டில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் இருவர் கடந்த வாரம் யாழ்ப்பாணப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இராஜகாரியர் துரைராஜா (அளவெட்டி வடக்கு), சண்முகராசா சசிகரன்(கோண்டாவில் மேற்கு) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது தலா ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் செலுத்தவேண்டும் என்றும் அவ்வாறு செலுத்தத் தவறினால் இரண்டு வருடங்களுக்கு சிறைத் தண்டனை வழங்கப்படும் என்றும் யாழ்நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (க-5)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
15
-
06
-
1952



உதிர்வு
11
-
05
-
2000

## திருமதி பரமலிங்கம் செல்வநாயகி

திதி:- 30-04-2001

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய் விளங்கிய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாசமுடன்:
நாகமணி பரமலிங்கம் *(கணவர்)*
மார்க்கண்டு சாரதாம்பாள் *(தாயார்)*
திரு.திருமதி ரகுநாதன் யமுனா *(சுவிஸ்)*
திரு.திருமதி ரவீந்திரன் இழுதா *(லண்டன்)*
திரு.ரயந்தன் *(கொழும்பு)*
திரு.திருமதி இராசநாயகம் யோகநாயகி குடும்பம்
திரு.திருமதி குலசிங்கம் சாலினி குடும்பம் *(கனடா)*

கந்தரோடை,
சுன்னாகம்.

(87173)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
20
-
07
-
1948



மறைவு
31
-
03
-
2001

## திருமதி காளிதாசன் சரஸ்வதி

*அன்பாலும் பண்பாலும் எம்மை*
*அரவணைத்து வையத்துள் நாம் நல்வாழ்வு வாழ்வதற்கு*
*நல்வழி காட்டிய எம் அருமைத் தாயே!*
*நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்*
*உங்கள் நினைவு எம்மை விட்டுப் பிரியாது!*
*எமது தெய்வத்துக்கு இதய அஞ்சலிகள்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர்:- காளிதாசன்
பிள்ளைகள்:- பகிரஜிதா, ஜெனிதா
சகோதரர்கள், உறவினர்கள்.

*மானிப்பாய் மேற்கு,*
*மானிப்பாய்.*
(87018)


உ
அம்பாள் துணை




கரணவாய் வடக்கு, எள்ளங்குளப் பதி

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய

வருடாந்த மூன்றாம் நாள்

# மஹோற்சவ விஞ்ஞாபனம்



இன்று (30-04-2001) திங்கட்கிழமை
பிற்பகல் 1.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரையில் வரும்
சுபவேளையில் அம்பாளை வேண்டிக்கொண்டு
மஹோற்சவ மூன்றாம் நாளாகிய இன்றைய இந்த நன்னாளில்
பெருமளவில் மதிப்பு மிக்க பொருளாகிய

## "இரும்புச் சகடை"

ஒன்றை சகலகலாவல்லி என அழைக்கப்படும் அன்னையின் திருவீதியுலா
சேவைக்காக அவளது திருப்பாதங்களைப் பணிந்து
அவளுக்கே சமர்ப்பிக்கின்றேன்.
அம்பாள் அடியார்களை இந்த வெள்ளோட்டத்தில் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*"ஈஸ்வரி அரிசி ஆலை",*
M.M.V. வெல்டிங் வேக்ஸ்,
லிங்கம் கொம்மினிக்கேசன்,
*தொலைபேசி இல. - 070-212514*
*சமரபாகு, வல்வெட்டித்துறை.*

(87200)

உபயம்:
மா.வேலும்மயிலும்
குடும்பத்தினர்.


# நீங்காத நினைவலைகளில்

5 ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு



அமரர்
**வீரசிங்கம் தம்பிராசா**

திருமதி
**மாணிக்கம் தம்பிராசா**

| | | |
|---|---|---|
| 19-04-1996 | மறைவு | 10-05-2000 |
| 10-04-2001 | திதி | 30-04-2001 |

*எங்கள் அன்புத் தெய்வங்களின்*
*ஆத்மா சாந்தியடைய, எல்லாம் வல்ல*
*வீரபத்திரப் பெருமானை வேண்டுகின்றோம்.*

*மயிலிட்டி தெற்கு,*
*கட்டுவன்.*

தற்காலிக முகவரி:-
*20,கட்டைப்புலம்,*
*சுன்னாகம்.*

(C/16478)

பாசமுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# எதிர்காலத்தை மனதில் கொண்டு காய்களை நகர்த்தும் ம.தி.மு.க.!

தி.மு.கவிலிருந்து சென்றதாலோ என்னவோ, எழும்பூரில் உள்ள ம.தி.மு.க.தலைமையகமான 'தாயகம்', அப்படியே அறிவாலயத்தின் பரபரப்பைக் கொண்டிருந்தது.

அடுத்து ஆட்சியைப் பிடிக்கும் கனவெல்லாம் ம.தி.மு.க.வினரிடம் காணப்படவில்லை. ஆனால் ஆட்சிக்கு வருவதற்கான முதல்படியாகவே இந்தத் தேர்தலை அவர்கள் கருதுகிறார்கள்.



அதனால், தி.மு.க. கூட்டணியில் இருந்து தாம் வெளியேறியதற்கான காரணங்களை அடுக்குகிறார்களே தவிர வெற்றி - தோல்வியைப் பற்றி அவர்கள் அதிகம் கவலைப்படவில்லை என்றே தோன்றுகிறது.

ம.தி.மு.க. 'பேனர்களை' அடுக்கி கட்டிவிட்டு நிமிர்ந்த அந்தத் தொண்டரிடம் பேச்சுக் கொடுத்தோம் -

தனியாகப் போட்டியிடும் இந்த முடிவை அண்ணன் (வை.கோபாலசாமியை அப்படித்தான் குறிப்பிடுகிறார்கள்) எப்போதோ எடுத்திருக்க வேண்டும். சரி இப்போதாவது எடுத்ததில் தொண்டர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள் என்று கூறினார் அவர்.

ம.தி.மு.கவில் செய்தித் தொடர்பாளராக இருந்த ராதாகிருஷ்ணன் தி.மு.க.வில் இணைந்தது தொண்டர்களுக்கு மன வேதனையை அளித்துள்ளதை அறிந்து கொள்ளமுடிகிறது.

'தாயகம்' ராதாகிருஷ்ணனின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த சமயம், அனைத்து வேலைகளையும் அவரே பார்த்தார். தேர்தல் சமயத்தில் அவர் கட்சி மாறியதால்; 'தாயகம்' சிறிது தள்ளாட்டம் கண்டிருப்பது உண்மைதான்.

கருணாநிதி தம்மை வஞ்சித்து விட்டதாக ம.தி.மு.கவினர் கூறி வருகின்றார்கள்.

கருணாநிதி எமது உழைப்பை தேர்தல் நேரத்தில் பயன்படுத்தி, எமது வாக்குகளையும் பெற்றுக் கொண்டு, எம்மை அழிக்கவும் திட்டம் தீட்டினார் என்று ம.தி.மு.கவினர் குற்றஞ் சாட்டுகிறார்கள்.

ஆனாலும் தனது மகன் ஸ்டாலினின் எதிர்கால நலனுக்கு வைகோவின் வளர்ச்சி இடையூறாக இருக்கும் என்பதாலேயே, ம.தி.மு.கவை மட்டம் தட்ட கருணாநிதி முனைகிறார் என்ற குற்றச்சாட்டை ம.தி.மு.கவின் முக்கிய தலைவர்கள் வெளிப்படையாகச் சொல்வதை நாகரிகமாக இம்முறை தவிர்த்துக்கொள்வதை அவதானிக்க முடிந்தது.

அண்ணனின் சொந்த ஊர் உள்ள சங்கரன்கோயில் தொகுதியைக் கூட ம.தி.மு.கவுக்கு தராமல் தி.மு.கவுக்கு ஒதுக்கியிருக்கிறார் கருணாநிதி. இப்படி நாம் வெற்றி பெற்று விடக்கூடாது என்பதற்காகவே வெற்றி வாய்ப்பில்லாத தொகுதிகளை எமக்கு கருணாநிதி ஒதுக்கினார்? இதை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும் என்று பொரிந்து தள்ளினார் ஒரு தொண்டர். எல்.கணேசன் போன்ற முக்கிய ம.தி.மு.க. பிரமுகர்கள் சிலரின் வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளை, வேண்டுமென்றே கருணாநிதி தம்வசம் வைத்திருந்ததாகவும் - இதன் மூலம் ம.தி.மு.கவின் குரல் சட்டசபையில் ஓங்கி ஒலிக்காமல் இருக்க கருணாநிதி பின்னிய சூழ்ச்சி வலையே அது என்றும், குறிப்பிட்ட அந்தத் தொண்டர் இதற்குப் பிறகும் தி.மு.கவுடன் உறவாட எங்களுக்கு சூடு சுறணை இல்லையா என்று ஆக்ரோஷமாகக் கேட்டார் அவர்.

சரி தனித்து நின்று வெற்றி பெற முடியுமா என்று மற்றொருவரைக் கேட்டோம்.

இன்றைய திகதியில் ஊழல் குற்றங்கள் எதுவும் சுமத்தப்படாத அரசியல் தலைவர்கள் வைகோ மட்டுமே. மக்கள் நேர்மையான ஆட்சியை விரும்புகிறார்கள்; ஜெயலலிதாவின் ஊழல் ஆட்சியையும், கருணாநிதியின் குடும்ப ஆட்சியையும் வெறுத்து, 'அண்ணன் வைகோவை அடுத்த முதல்வராக்கவே மக்கள் விரும்புகிறார்கள். மேடைப் பேச்சு பாணியில் தான் கூறியதில் அவருக்கே நம்பிக்கை இருக்குமா என்பது தெரியவில்லை.

மெதுவாகத் தாயகத்துக்குள் நுழைந்து ம.தி.மு.க.வின் முக்கிய பிரமுகர் ஒருவரிடம் நம்மை அறிமுகப் படுத்தினோம்.

தனது பெயரை வெளியிட வேண்டாம் என்று கூறிவிட்டு அவர் தெரிவித்தவை, இதோ,...

ம.தி.மு.கவின் வளர்ச்சி தி.மு.கவின் எதிர்காலத்தை பாதிக்கும் என்று கருணாநிதி எண்ணுகிறார். பாரதீய ஜனதா கூட்டணியில் தி.மு.கவுடன் சமமான கட்சியாக ம.தி.மு.க. வளர்வது அவருக்குப் பிடிக்கவில்லை இதனால் தொகுதி ஒதுக்கீட்டில் ம.தி.மு.கவை விட பா.ஜ.கவுக்கு அதிக இடங்களைக் கொடுத்து மோதவிட்டார். அது பலிக்காததால், எமக்கு வெற்றி வாய்ப்பற்ற தொகுதிகளைத் தந்து மட்டம் தட்ட முயற்சித்தார். எப்படியும் நம்மைக் கூட்டணியில் இருந்து வெளியேற்றி பா.ஜ.கவுக்கு எதிராகத் திருப்பிவிட்டால், மத்தியில் தி.மு.க. மட்டுமே தமிழக கட்சிகளில் அமைச்சர்களைக் கொண்டிருக்கும். அதற்காக திட்டம் போட்டு காய்களை நகர்த்தினார் கருணாநிதி. ஆனால், வைகோ பா.ஜ.கவைப் பகைக்காமல், தி.மு.கவை மட்டும் எதிர்க்கும் நிலையை எடுத்ததால் கருணாநிதி விழி பிதுங்குகிறார் - என்றார் அந்தப் பிரமுகர்.

தேர்தல் வாய்ப்பு எப்படி என்று நாம் சந்தித்த மாவட்டச் செயலாளர் ஒருவரிடம் கேட்டோம்.

**சென்னையிலிருந்து 'இந்திரஜித்'**

ம.தி.மு.க. தென் மாநிலங்களில் செலவாக்குப் பெற்றிருக்கிறது. அ.தி.மு.க. தேவர் இனக் கட்சி என்று பெயர் வாங்கிவிட்டது. தலித் கட்சிகளும் தி.மு.க. பக்கம் சென்றுவிட்டன. இந்த நிலையில் விருதுநகர் முதல் கன்னியாகுமரி வரை பெருமளவில் உளள நாடார் இனத்தவரின் ஆதரவு நிச்சயம் ம.தி.மு.கவுக்குக் கிடைக்கும். தேவர் இனத்தவருடன் காலம் காலமாகப் பகைமை பாராட்டும் நாடார் இன மக்களுக்கு எம்.பி. என்ற முறையில வைகோ பல உதவிகளைச் செய்துள்ளார். ஆகவே தென் பகுதியில் எபபடியும் வெற்றி பெறுவோம் - என்றார் அவர். ஆனால் மறந்தும் ஆட்சியைப் பிடிப்போம் என்று அவர் கூறவில்லை.

இதிலிருந்து தேர்தலில் ம.தி.மு.கவின் நிலை தெளிவாகப் புரிந்தது.

தெருவுக்கு வந்தோம். அங்கு காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தெரிந்த பொலீஸ் அதிகாரி ஒருவரிடம் பேச்சுக் கொடுத்தோம். அவர் புதிய கோணத்தில் ஒரு விளக்கமளித்தார். ம.தி.மு.க. தனித்துப் போட்டியிடும முடிவை அவர் வரவேற்றார்.

> தமிழக சட்டமன்றத் தேர்தல்களம் சூடுபிடித்திருக்கிறது. தமிழகத்தின் மூலைமுடுக்கு எங்கும் தேர்தல் திருவிழா களை கட்டியிருக்கிறது.
>
> இந்தப் பரபரப்பான சூழ்நிலைக்கு மத்தியில் பிரதான கட்சிகளுக்குள்ள வெற்றிவாய்ப்புகளை அக்கட்சிகளின் ஆதரவாளர்கள், தொண்டர்களின் கருத்துக்கள் மூலம் நாடி பிடித்தறிய முயல்கிறார் இந்தக் கட்டுரையாளர்.
>
> ஆளும் கட்சியான தி.மு.கவின் நிலை குறித்து நேற்று இக்கட்டுரையில் முதற்பகுதியில் பார்த்தோம்.
>
> மற்றொரு முக்கிய கட்சியான ம.தி.மு.கவின் உத்திகள் மக்கள் மத்தியில் அதற்கு உள்ள செல்வாக்கு என்பன குறித்த கண்ணோட்டம் இன்று இரண்டாவது பகுதியில் வெளியாகிறது.

அ.தி.மு.க.கூட்டணியில் ம.தி.மு.க. இருந்தபோது, அ.தி.மு.க. தொண்டர்களிடம் வைகோவுக்கு அதிக செல்வாக்கு இருந்தது. ஜெயலலிதாவே இதனால் சற்றுக் கலக்கமடைந்ததாக அப்போது செய்திகள் கசிந்தன.

வைகோவின் உணர்ச்சிகரமான பேச்சுக்கு, தி.மு.கவிலேயே ரசிகர்கள இன்றும் உள்ளனர். அப்படி இருகக, அதி.மு.கவின் அவர் பின்னால் அணி திரள வாய்ப்புண்டு. இன்று தமிழகத்



தில் மக்களிடம் தனிப்பட்ட செல்வாக்குப் பெற்ற கவர்ச்சிகரமான தலைவர்கள் கருணாநிதி, ஜெயலலிதா, வைகோ ஆகிய மூவர் மட்டுமே. இதில் ஜெயலலிதா இனி தேர்தலில் போட்டியிடுவதே சந்தேகத்துக்கு இடமாகிவிட்டது. அந்த நிலையில் அவரால் அ.தி.மு.கவை கட்டிக் காக்க முடியுமா என்பது சந்தேகமானது.

தி.மு.கவில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்போது ஆட்சியில் இருந்த ஜெயலலிதாவின் ஊழலைக் கண்டித்து நீண்ட நடை பயணம் சென்றார் வைகோ. அப்போது எம்.ஜி.ஆர். பாடல்களே வழி நெடுகிலும் ஒலித்தன. தன்னை மற்றொரு எம்.ஜி.ஆராகக் காட்டிக் கொள்ளவே வைகோ அப்போது முயற்சித்தார்.

எம்.ஜி.ஆரைப் போன்றே நேர்மையானவர், வீரமானவர் என்ற 'இமேஜ்' வைகோவுக்கு உண்டு. இந்த சூழ்நிலையில், ஜெயலலிதா அரசியலில் ஓரங்கட்டப்பட்டால், தி.மு.க. எதிர்ப்புணர்வில் பயிற்றப்பட்ட அ.தி.மு.கவினர் வைகோவின் பின்னால் அணி திரளக் கூடிய வாய்ப்புண்டு. ஜெயலலிதாவுக்கு அடுத்து அ.தி.மு.கவில் இரண்டாம் மட்டத் தலைவர்கள் எவரும் இல்லை. அதனால், தி.மு.கவுக்கு எதிரான - அதற்கு சம பலமுள்ள-ஒரு கட்சியாக ம.தி.மு.க. உயரும். அப்படி ஒரு சமயம் வந்தால் வைகோ தமிழக முதல்வராவது நிச்சயம் என்றார் அந்த பொலீஸ் அதிகாரி.

நமக்குப் புரிந்தும் புரியாமலும் இருந்தது. பசி வயிற்றைக் கிள்ளவே அவரிடம் விடை பெற்றுக் கொண்டு 'ரவுண்ட்-அப்'பை ஒத்தி வைத்துவிட்டு அருகில் இருந்த உணவுச்சாலைக்குள் புகுந்தோம். உணவுக்குச் சொல்லிவிட்டு கடை முதலாளியிடம் ம.தி.மு.கவின் வெற்றி குறித்துப் பேச்சுக் கொடுத்தோம்.

அவர் தனது பாணியில் கூறினார்-

'நாளைக்கு சுடுற வடைக்கு இன்று உளுந்து ஊறப் போடுவது போலத்தான் இதுவும்' கலைஞருக்குப் பிறகு தி.மு.கவில் தலைமை குறித்து சர்ச்சை எழும். அந்தச் சமயத்தில் ம.தி.மு.க. பலமான கட்சியாக உருவாக சந்தர்ப்பம் உண்டு.

இப்படி நாளைய நன்மையைக் கருத்தில் கொண்டே வைகோ காய்களை நகர்த்துகிறார். அதற்குள் சாப்பாடு வரவே, தேர்தலை மறந்து சோற்றில் பாத்தி கட்டி சாம்பாரை ஊற்றினோம்.

(வளரும்)

## மாநகரசபைப் பகுதியிலுள்ள வீதிகள், குளங்களின் சாதி அடிப்படையிலான பெயர்களை நீக்கவேண்டும்

### மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ். மாநகரசபைப் பகுதியில் சாதிப் பெயரிலுள்ள வீதிகள், தெருக்கள் மற்றும் குளங்களின் பெயர்களை மாற்றிப் புதிய பெயர்கள் சூட்டப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் ம.மங்களநேசனால் முன்மொழியப் பட்ட இந்தப் பிரேரணையை ஏற்றுக் கொண்ட மாநகரசபை உறுப்பினர்கள் - இவ்வாறு சாதிப் பெயரில் உள்ள வீதிகள், தெருக்கள், குளங்கள் போன்றவற்றின் பட்டியல்களைத் திரட்டி அதனைப் பத்திரிகையில் விளம்பரம் செய்து பொதுமக்கள் மற்றும் பொது நிறுவனங்களின் கருத்துக்களைப் பெறுதல் வேண்டும் என்றும் தீர்மானித்தனர்.

சபையில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

★ மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பான பிரேரனைகளை தவிர்த்து அரசியல் சம்பந்தமான பிரேரணைகள் கொண்டு வருவதற்கு சபைக்கு போதிய முன்னறிவித்தல் கொடுக்கப்படவேண்டும்.

★ யாழ். மாநகரசபைக்கு ஒரு 'பிக்கப்' வாகனம், ஒரு 'றோட் றோலர்', 2 உழவு இயந்திரங்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோருதல் வேண்டும்.

★ யாழ்.மாநகரசபையின் பழைய கட்டடம் இருந்த காணி, சுப்பிரமணியம் பூங்கா போன்றவற்றைச் சுற்றி வேலிகள் போடப்பட வேண்டும்.

★ யாழ். பொலீஸ் நிலையத்தை தற்பொழுதுள்ள இடத்திலிருந்து மாற்றுவதற்கும் பொலீஸ் நிலையப் பகுதியிலுள்ள மணிக்கூட்டு வீதியை மக்கள் போக்குவரத்துக்குத் திறந்து விடுவது பற்றியும் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

★ போயா தினங்களில் மாநகர சபை பிரதேசத்தில் திரைப் படக் காட்சிகள் நடத்தப்படுவதை தடை செய்ய வேண்டும்.

★ மாநகர எல்லைக்குள் இயங்கும் மதுபான விற்பனை நிலையங்களின் (விளையாட்டுக் கழகம்) வரி கட்டணத்தை அதிகரித்தல் வேண்டும் - ஆகிய தீர்மானங்கள் உட்பட மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

(க-5)

## வாழைச்சேனையில் மோதல்

மட்டக்களப்பு,ஏப்.30

வாழைச்சேனைப் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதல் சம்பவத்தில் இரு தரப்பிலும் ஒவ்வொருவர் உயிரிழந்தனர் என்று இராணுவத் தரப்பு செய்தியை மேற்கோள்காட்டி செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

(ம-6-9)

## கசிப்புடன் சிக்கிய 10 பேருக்கு 24 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

யாழப்பாணம்,ஏப்.30

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 10 பேர் மதுவரித் திணைக்கள அதிகாரிகளிடம் கையும் மெய்யுமாகச் சிக்கினார்கள்.

இந்தப் பத்துப் பேரும் யாழ். நீதிமன்றத்தில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்களிடம் இருந்து 24 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக அறவிடுமாறு உத்தரவிட்டதுடன், இதில் தலா ஆயிரம் ரூபாவை இருபாலையிலுள்ள கானான் சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு தர்மப்பணமாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

கண்மணி சுப்பிரமனியம்(கொக்குவில்), கந்தையா செல்வரட்னம் (கொக்குவில்), சிவகுரு நடராஜா (ஆனைக்கோட்டை), தம்பிராஜா பாலகங்கன் (கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்), யோகேஸ்வரன் பிறேமா (அன்னங்கை - உரும்பிராய்), வீரகத்தி நடராஜா (கோண்டாவில் வடக்கு), நடராசா பத்மலோஜினி (கொக்குவில் மேற்கு), நாகலிங்கம் செல்வராசா (கொக்குவில்), புஸ்பராசா வரதராசா (வளாக வீதி - திருநெல்வேலி), ஞானசீலன் புஸ்பராணி (இராசாவின்தோட்டம் - யாழ்ப்பாணம்) ஆகியோரே மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

(க-5)

## பொன்னாலை - யாழ். 785 இலக்க புதிய பஸ் சேவை

காரைநகர்,ஏப்.30

பொன்னாலைச் சந்தியில் இருந்து யாழநகருக்கு நாளை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 785 இலக்கப் புதிய பஸ் சேவை காலை 6.45 மணிக்கு நடத்தப்பட உள்ளது.

தினமும் இந்த பஸ்சேவை காலை 6.45 மணிக்கு பொன்னாலையில் இருந்து புறப்பட்டு மூளாய், சுழிபுரம், சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, செட்டியாமடம் ஆகிய இடங்களின் ஊடாக யாழ்நகரைச் சென்றடையும்.

பொன்னாலைப் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு அமைய இந்த பஸ் சேவையை நடத்த உள்ளதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபை காரைநகர் சாலை முகாமையாளர் எஸ். உருத்திரசிங்கம் தெரிவித்தார்.

(க-73)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### புலமைப்பரிசில்

அம்பிகைபாகனின் ஆண்டு 5 புலமைப் பரிசில் 2001-2002 இற்கான முற்றிலும் புத்தம் புதிய பதிப்பு. தனிப்பிரதி விலை ரூபா 240/= பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (87192)

### வாழ்த்து மடல்கள்

**Wedding Cards, Birthday Cards etc** புத்தம் புது வண்ணமிகு டிசைன்களில் மலிவு விலையில். வியாபாரிகளுக்கு விசேட கழிவு. பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி : 2365 (87191)

### "கம்பியூட்டர் ருடே"

"கம்பியூட்டர் ருடே" சஞ்சிகை மார்ச், ஏப்ரல் இதழ்கள் விற்பனையாகின்றன. தனிப்பிரதி விலை ரூபா 30/=. பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் தொலைபேசி : 2365. (87190)

### விற்பனைக்கு

கடைப்பாவனைக்கு உகந்த கண்ணாடி அலுமாரிகள், சோக்கேஸ் மற்றும் **3KV** வலுவுடைய **HONDA** ஜெனறேற்றர் விற்பனைக்குண்டு. தொடர்பு: 22, மருதடி வீதி, நல்லூர், (பாப்பையா கடைச் சந்தி) யாழ்ப்பாணம். (87187)

நல்ல நிலையிலுள்ள ஒலிம்பியா **[OLYMPIA]** தமிழ் தட்டச்சு இயந்திரம் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.சிவனேஸ்வரன், "ஈஸ்வர வாசம்", மயிலணி, சுன்னாகம். (87201)

நல்ல நிலையிலுள்ள பாவித்த **REMINGTON** ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் போன்.2037. (87205)

### வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை புலோலி கிழக்கில், பிரதான வீதிக்கு அருகில் மூன்று பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு. மற்றும் கடைப்பாவனைக்கு உகந்த மரத்திலான கண்ணாடி சோக்கேஸ்கள், கவுண்டர் மேசைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.76, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (87223)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

40 நாள்கள் நிரம்பிய நல்லின அலஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: A.குகன், 25/16, ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (87159)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழி புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் என்பன (பாதிக்கோழி உட்பட) தினமும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- தனபாலசிங்கம், 19, முருகேசர் வீதி, முத்திரைச் சந்தையடி (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), நல்லூர். (87193)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு:- பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081. **(C/15377)**

### தவறிவிட்டது

சு.நாராயணமூர்த்தி என்னும் பெயர் பொறிக்கப்பட்ட மூக்குக் கண்ணாடி கவருடன் பஸ் நிலையத்துக்கும், கஸ்தூரியார் வீதிக்குமிடையில் 24.04.2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சு.நாராயணமூர்த்தி, மாரி அம்மன் கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (87184)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

கறுப்பு நிற அல்ஷேசன் பெண் நாய் (**1 1/2** வயது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ஐ.சிறி, **M.S.** லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். செவ்வாய்க்கிழமை (01.05.2001) சந்திக்கவும். (87227)

### தேவை

பப்படம் தயாரிப்பதில் அனுபவமுள்ள ஆண், பெண் (இருபாலரும்) வேலை பழக விரும்பும் பெண் பிள்ளைகளும் தேவை. தொடர்பு: 18, கொண்டலடி லேன், நல்லூர்.(87198)

## IT NET COMMUNICATION & NETCAFE

வெளிநாட்டு இணைப்புத் தொலைபேசி அழைப்புக்கள்
குறைந்த கட்டணத்தில்

☆ ஒரு வருட அனுபவ சேவை
☆ **ISDN 128 Kb, Speed Line** சேவை
☆ 10 செக்கன்களில் தொடர்பு இணைக்கப்படும்.

மிகவும் துல்லியமான அழைப்புக்களுக்கு
உடன் தொடர்பு கொள்ளவும்
T.P. 466752, 466952, 466718, 466918, 384586
**183, Sea Street, Colombo - 11** (87228)

## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் பார்வதிப்பிள்ளை
(திக்கம்)

திக்கம் வல்லிபுரம் பார்வதிப்பிள்ளை அவர்கள் நேற்று (29.04.2001) அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா வல்லிபுரம் (வர்த்தகர், தம்பலகாமம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிர்காமு - பொன்னம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (வர்த்தகர், மட்டக்களப்பு), காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற புஷ்பவதி மற்றும் வர்ணகுலசிங்கம் (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை), பகவதி, சூரசங்காரம் (வர்த்தகர்), யோகாம்பிகை, தர்மகுலசிங்கம் (நீதிமன்றம், பருத்தித்துறை), ராஜகுலசிங்கம் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), செல்வமணி (இராசம்மா - ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தபால் தொலைத் தொடர்புத் திணைக்களம்), திலகவதி, ஸ்ரீஸ்கந்தராஜா (பிரதேச செயலகம், பளை), அனுசுயா, மலர்வதனி (நோர்வே) ஆகியோரின் மாமியாரும், முகுந்தன் (மீன்பிடியியல் டிப்ளோமா, யாழ். பல்கலைக்கழகம்), சுகந்தன், ஜெயந்தன், நிரோஜன், நிதர்ஷன், நிமலன், வெண்ணிலா (பிரதேச செயலகம், கோப்பாய்), வான்மதி (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை - பலாலி), வாகீசன் (பேராதனைப் பல்கலைக்கழகம்), செந்தூரன், திவாகர், கார்த்திகா, நிஷாந்தி, ரமணன், ஹாரிணி, ஹர்ஷினி (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நடராஜாவின் பெரியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திக்கம் பார்வதி பூங்காவில் நடைபெற்று பூதவுடல் திக்கம் மயானத்தில் நேற்று (29.04.2001) பிற்பகல் 2 மணிக்கு தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
வ.வர்ணகுலசிங்கம்
(மகன்)

*"பார்வதி பூங்கா"*
*திக்கம்.* (87232)

## படையினரின் சோதனைகள் தீவிரம்

வடமராட்சி,ஏப்.30

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கடந்த சில தினங்களாகப் படையினரின் சோதனைகள் அதிகரித்துள்ளன.

இவ்வீதியில் வழமையாக உள்ள சோதனைச் சாவடிகளைவிட அச்சுவேலி, ஆவரங்கால் போன்ற இடங்களில் வைத்து படையினர் சோதனைகளை நடத்தி வருகிறார்கள்.

வாகனங்களில் வரும் பயணிகள் மோட்டார் சைக்கிள், சைக்கிள்களில் வருவோர் உள்ளிட்ட அனைவரும் இறக்கப்பட்ட பின்னரே தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். (க-173)

## லண்டன் பயணமானார்

வலி.தெற்கு,ஏப்.30

இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் சமய சம்பந்தமான பல்வேறு விவகாரங்களில் பங்கேற்கும் முகமாக லண்டனுக்குப் பயணமானார். (க-152)



பாம்பென்றால் படையும் நடுங்கும். இங்கே இராஜ நாகம் உட்பட மூன்று நாகபாம்புகளை ஒன்றாகப் படத்தில் காண்கிறீர்கள்.

காரைநகர் வேதரடைப்பு என்னும் இடத்தில் தூர்ந்து போன கிணறு ஒன்றினுள் இந்த மூன்று பாம்புகளும் காட்சி கொடுக்கின்றன.

காரைநகரின் பெரும் பிரதேசம் பொதுமக்கள் வசிக்காத பகுதியாகக் காடு மண்டிக் கிடக்கிறது. அங்கு கொடிய விஷப் பாம்புகளுக்குக் குறைவே இல்லை. பாம்புகள் குடிமனைகளுக்குள் புகுந்து பெரும் கிலேசம் ஏற்படுத்துவதுமுண்டு. (ஐ)

(படம்: காரைநகர் செய்தியாளர்)

## மாணவருக்கு சரீர தண்டனை வழங்கவேண்டாம் என அறிவுறுத்து

வலிகாமம்,ஏப்.30

எச்சந்தர்ப்பத்திலும் மாணவ - மாணவிகளுக்கு சரீர தண்டனை வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், சரீர தண்டனைக்கு மாற்றாக எச்சரிக்கை செய்தல், பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு அறிவித்தல், தவறு செய்த மாணவர் அனுபவிக்கும் சிறப்பு உரிமைகளைக் குறைத்தல் அல்லது வரையறுத்தல், பாரதூரமான ஒழுக்கக் கேட்டுச் செயலில் ஈடுபடும் போது பெற்றோருக்கு அறிவித்து இரண்டு வாரத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு வகுப்புத்தடை விதித்தல் போன்றவற்றுள் ஒன்றைக் கடைப்பிடிக்குமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல், வலயக் கல்விப் பணிப்பாளர்களூடாக பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

மாற்றுத் தண்டனை வழங்கும் போது அதிபர்கள் பாடசாலை ஒழுக்கக் கட்டுப்பாட்டுச் சபையைக் கூட்டி முறையாக விசாரணைகள் நடத்தி அங்கு எடுக்கப்படும் தீர்மானத்துக்கு அமைய செயற்படுமாறும், மாணவர்கள் உடல், உளரீதியாகத் துன்பங்களுக்குள்ளாகும் போது வெறும் அடக்குமுறைகள் மூலம் மாணவர்களின் ஒழுங்குக் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவது கஷ்டமாவதுடன் அது ஒரு வெற்றியளிக்காத செயல் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சாசனத்துக்கு அமைய பாடசாலை ஒழுங்கு, கட்டுப்பாடு, நிர்வாகம், சிறுவர்களின் மனித கௌரவம் என்பனவற்றுக்கு சார்பான முறையில் நடந்து கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியரால் மாணவருக்கு வழங்கப்படும் தண்டனை காரணமாக இலங்கை குற்றவியல் சட்டத்தின் பிரகாரம், பிள்ளைகள் கொடூர தன்மைக்கு உட்படுத்தப்படும் குற்றத்தின் கீழ் வழக்குத் தொடரவும் வாய்ப்புக்கள் உண்டு எனவும் டாரா டி மெல் சுட்டிக்காட்டி உள்ளார்.(ஐ-152)

## கிராம அலுவலர்கள் இடமாற்றத்தை இடைநிறுத்தப் பணிப்பு

கிராம அலுவலர்களை உள்ளக ரீதியாக இடமாற்றம் செய்யப்படுவதை இடைநிறுத்தி வைக்கும்படி அரச அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் இருந்து இதற்கான அறிவுறுத்தல்கள் மாவட்ட அரச அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மாவட்டத்தில் கிராம அலுவலர் வெற்றிடங்கள் பற்றிய விபரங்களையும் அனுப்பி வைக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (க-86)

## தர்மசாஸ்தா குருகுலத்தில் இலவச வகுப்புக்கள்

இணுவில் தர்மசாஸ்தா குருகுலத்தில் பிராமணர்களுக்கான இலவச வகுப்புக்கள் தினமும் பிற்பகல் வேளைகளில் நடைபெற்று வருகின்றன.

கணபதி சூக்கம், பூ சூக்கம், அக்கினி கார்யம், விக்னேஸ்வர மண்டப பூஜை போன்ற பல வகுப்புக்கள் தினமும் பிற்பகல் இரண்டு மணியில் இருந்து நடைபெற்று வருகின்றது. பலர் இவ்வகுப்புக்களில் பங்குபற்றி இலவச பயிற்சி பெற்று வருகின்றனர். (க-152)

## மின்மானிகளைப் பொருத்துமாறு கோரிக்கை

மூளாய்,ஏப்.30

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள மின்சாரம் பாவிக்கும் இடங்களுக்கு மின்மானிகளைப் பொருத்துமாறு கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் மின்சாரம் பாவிக்கும் இடங்களுக்கு நீண்ட காலமாக மின்மானிகள் பொருத்தப்படவில்லை.

இவ்விடயம் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ்விடயம் ஆராயப்பட்டது.

அதைத் தொடர்ந்து அனைத்துப் பகுதிகளுக்கும் மின்மானிகளைப் பொருத்தும்படி மின்சார சபை அதிகாரிகளுக்கு பிரதேச செயலர் க.குணராசா பணிப்புரை விடுத்துள்ளார். (க-99)

யுத்த நிறுத்தம்! பேச்சுவார்த்தை! சுயநிர்ணய உரிமை!
இவற்றை வலியுறுத்தி
**புதிய - ஜனநாயகக் கட்சியும்**
**நவ லங்கா தொழிலாளர் சங்கமும்**
இணைந்து நடத்தும்

### புரட்சிகர மேதினக் கூட்டம்

*காலம்:* 01.05.2001 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு
*இடம்:* **யாழ்.ப.நோ.சங்க தலைமை மண்டபம்** (சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
*தலைமை:* **தோழர் கா.கதிர்காமநாதன்** (வட பிரதேச செயலாளர், புதிய ஜனநாயகக் கட்சி)
*உரையாற்றுவோர்:*
**தோழர்கள்: சி.கா.செந்திவேல்**
(பொதுச் செயலாளர், புதிய ஜனநாயகக் கட்சி)
**கா.பஞ்சலிங்கம்**
(நவ லங்கா தொழிலாளர் சங்கம்)
**க.தணிகாசலம்**
(ஆசிரியர், தாயகம் தே.க.இ.பேரவை)
மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உரையாற்றுவர்.
*கலை நிகழ்ச்சிகள்:* நாடகம் - **'புதியதோர் உலகம்'**
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**- புதிய ஜனநாயகக் கட்சி**
**நவ லங்கா தொழிலாளர் சங்கம்.**
(87231)

## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்
**2002 A/L**

**PHYSICS**
திரு.குகன
☆ மின்புலம் ☆
ஆரம்பம்:- 01-05-2001 செவ்வாய்க்கிழமை
(செவ்வாய், வெள்ளி - 6.30 a.m)

**CHEMISTRY**
திரு.மகேஸ்வரன்
☆ பௌதிக இரசாயனம் ☆
ஆரம்பம்:- இன்று 30-04-01 திங்கட்கிழமை
(திங்கள், வெள்ளி - 4.00 p.m)
☆ சேதன இரசாயனம் ☆
ஆரம்பம்:- 05-05-01 சனிக்கிழமை
(சனி, ஞாயிறு - 7.00 a.m)
(87229)

## NEW SCIENCE HALL
**JAFFNA**

**A/L - CHEMISTRY - 2002**
**PAPER CLASS**
கடந்த கால வினாக்களின் அலகு ரீதியான வினாவிடை வகுப்பு
By: கு.ரவீந்திரன்
ஆரம்பம் :- 03-05-2001 வியாழன்
செவ்வாய், வியாழன் 6.45-7.45 a.m
(87230)

## ஆபிரிக்க நாடுகளிலிருந்து

# வெள்ளையரை வெளியேற்ற லிபிய அதிபர் அறைகூவல்

திரிபோலி, ஏப். 30

ஆபிரிக்காக் கண்டத்திலிருந்து அனைத்து வெள்ளையர்களையும் வெளியேற்றுமாறு லிபியத் தலைவர் கேணல் முகமட் கடாபி ஆபிரிக்க மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

லிபியத் தலைநகர் திரிபோலியில் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் உரையாற்றுகையிலேயே கடாபி இவ்வாறு கோரினார்.

வெள்ளையர்களின் காலனித்துவக் கலாசாரத்தாலோ, மொழியாலோ, ஆபிரிக்கர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்த முடியாது என்றும் —

காலனித்துவக் கலாசாரத்தின் எச்சசொச்சங்களை ஆபிரிக்க நாடுகளிலிருந்து அகற்றுவதற்கான போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் —

ஆபிரிக்காவில் வெள்ளையர்கள் சட்டவிரோதமாகவே தங்கியிருப்பதாகவும் — கடாபி தனதுரையில் குறிப்பிட்டார்.

காலனித்துவக் காலத்தில் வெள்ளையர்கள், ஆபிரிக்கர்களின் நிலங்களைக் கைப்பற்றியதை நினைவுபடுத்திய கடாபி வெள்ளையரிடமிருந்து நஷ்டஈடு கோரவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

1960களில் சுமார் 20 ஆயிரம் இத்தாலியர்களை லிபியா வெளியேற்றியதைச் சுட்டிக்காட்டி ஏனைய ஆபிரிக்க நாடுகளும் அதனைப் பின்பற்றுமாறும் கடாபி கேட்டுக் கொண்டார். (ஓ)

## திருப்பதி உண்டியல் வருமானம் ஒரே நாளில் 71 லட்சம் ரூபா

திருப்பதி, ஏப். 30

இந்தியாவின் புகழ்பெற்ற திருப்பதி வெங்கடாசலபதி கோயிலின் உண்டியல் மூலம் ஒரே நாளில் சுமார் 71 லட்சம் இந்திய ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

ஆந்திரா மாநிலம், சித்தூர் மாவட்டத்தில் உள்ள இந்தக் கோயிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர்.

அவர்கள் தத்தமது வேண்டுதல்களின்படி 'பணமாகவும், நகைகளாகவும் உண்டியலில் காணிக்கைகளைச் செலுத்துவது வழக்கம்.

உண்டியலில் நாள்தோறும் இடப்படும் காணிக்கைகள் அன்றன்றே எண்ணிக் கணக்கிடப்பட்டு வங்கியில் வைப்பிலிடப்படும்.

கடந்த 18 ஆம் திகதி இப்படி உண்டியல் மூலம் கிடைத்த வருமானம் 71 லட்சத்து 49 ஆயிரம் ரூபா என்று கோயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆண்டில் இதுவரை கிடைத்த ஆகக் கூடிய வருமானம் இதுவென்று கூறப்படுகிறது. (ஓ)

## 'திரிணாமுல்' அதிருப்தியாளருடன் அமைச்சர் அத்வானி சந்திப்பு

புதுடில்லி, ஏப். 30

இந்தியாவில் மேற்கு வங்கத்தின் மாநிலக் கட்சியான திரிணாமுல் காங்கிரஸின் அதிருப்தியாளர் அஜித்குமார் பாஞ்சா, உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானியைச் சந்தித்துப் பேசினார்.

அத்துடன் நேற்று முன்தினம் மாலை பிரதமர் வாஜ்பாயையும் பாஞ்சா சந்தித்தார்.

இந்தச் சந்திப்புகளையடுத்து, திரிணாமுல் காங்கிரஸில் பிளவு ஏற்படுவது உறுதியாகிவிட்டதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் தேர்தலில் பிரதமருடன் சேர்ந்து பிரசாரங்களில் ஈடுபடத் தயாராக உள்ளதாகவும் பாஞ்சா தெரிவித்துள்ளார்.

ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து திரிணாமுல் காங்கிரஸ் விலகியதும்; மேற்கு வங்க சட்டசபைத் தேர்தலில் இந்திய காங்கிரஸ் கட்சியுடன் அது கூட்டணி அமைத்திருப்பதும் தெரிந்தவையே. (ஓ-6-9)

## டில்லியில் நிலநடுக்கம்

டில்லி மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 8. 36 மணிக்கு லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவு கோலில் 8. 8 ஆகப் பதிவான இந்த நிலநடுக்கம் சில வினாடிகள் நீடித்தது. ஹரியானா மாநிலம் சோன்பத்தில் இது மையம் கொண்டிருந்தது. (ஓ-4)

## அமைதிப் பேச்சு நடத்த விரும்பினால்

# காஷ்மீர் மக்களின் எண்ணத்தை அரசு புரிந்து கொள்ள வேண்டும்

### என்கிறார் அவாமி லீக் தலைவர்

ஸ்ரீநகர், ஏப். 30

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக, மத்திய அரசின் பிரதிநிதி கே. சி. பந்துடன் கருத்துப் பரிமாற்றம் செய்யத் தமது கட்சிக்கு ஆட்சேபனை இல்லை.

இவ்வாறு அவாமி லீக் தலைவரும், முன்னாள் முதல்வருமான ஜி. எம். ஷா தெரிவித்தார்.

காஷ்மீர்களுடன் மத்திய அரசு பேச்சு நடத்த விரும்பினால் கே. சி. பந்த் காஷ்மீருக்கு வந்து மக்களின் விருப்பங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஷா கூறினார். (ஓ-6-9)

## அமெரிக்க உளவு விமானத்தின் இரகசியங்கள் சீனாவின் வசம்

### 'பென்டகன்' தெரிவிப்பு

வாஷிங்ரன், ஏப். 30

ஹைலான் தீவில் தரையிறக்கப்பட்ட அமெரிக்க உளவு விமானத்திலிருந்து பல ரகசியங்களை சீனா அபகரித்துள்ளதாக அமெரிக்க இராணுவத் தலைமையகமான "பென்டகன்" தெரிவித்துள்ளது.

ஏப்ரல் முதலாம் திகதி சீனப்போர் விமானத்துடன் மோதி விபத்துக்குள்ளாகி, அவசரமாகச் சீனாவின் ஹைலான் தீவில் தரையிறக்கப்பட்ட அமெரிக்க உளவு விமானத்தில் இருந்தே இரகசியங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க விமானத்திலிருந்த 24 வீரர்களையும் 11 நாள்கள் தடுத்துவைத்திருந்து பின்னர் சீனா விடுத்திருந்தது.

விமானம் தரையிறங்கியதும் அதிலிருந்த இரகசியங்களைப் பணியாளர்கள் அழித்திருப்பார்கள் என்று முதலில் நம்பப்பட்டது.

எனினும், பெரும்பாலான விவரங்களை அவர்களால் அழிக்க முடியாமல் போனதாக அமெரிக்கா தற்போது தெரிவித்துள்ளது. (ஓ)

## ஏற்றுமதித் தடையை அகற்ற 24 நாடுகள் குழு வலியுறுத்தல்

வாஷிங்ரன், ஏப். 30

வளர்ந்த நாடுகள் ஏற்றுமதிகள் மீது விதித்துள்ள தடைகள் அகற்றப்படவேண்டும் என்று 24 நாடுகள் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

அமெரிக்கப் பொருளாதாரத்தின் மந்தநிலை நிச்சயம[illegible] பொருளாதாரச் சூழலை உருவாக்கியிருப்பதாகவும், வளரும் நாடுகளிடையே பொருளாதார நிர்வகிப்பை இது மேலும் கடினப்படுத்தியுள்ளதாகவும் 24 வளர்ந்த நாடுகள் குழு கூறுகிறது.

இக் குழுவின் அமைச்சர்கள் நிலைக்கூட்டம் அமெரிக்காவில் நடைபெற உள்ளது.

இதனையொட்டி இந்தக் குழு வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)

## பலஸ்தீனப் போராட்ட ஆதரவு மாநாட்டில்

# யுத்தகாலக் குற்றங்களுக்காக இஸ்ரேலை விசாரிக்கத் தீர்மானம்

தெஹ்ரான், ஏப். 30

இஸ்ரேலிய இராணுவம் புரிந்த யுத்தக் குற்றங்கள் குறித்து சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை நடத்த வேண்டும் என்று பலஸ்தீன எழுச்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற இந்த இரண்டு நாள்கள் மாநாட்டின் இறுதியில் மேற்படி தீர்மானம் நிறைவேறியது.

இஸ்ரேலுக்கு உதவி புரியும் அமெரிக்காவைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டில் பங்கு பற்றிய 30 க்கும் மேற்பட்ட நாடுகள் இந்தத் தீர்மானங்களில் கைச்சாத்திட்டன.

பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் கட்டவிழ்த்து விட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை இடம்பெற வேண்டுமென்றும்,

இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்கும் அமெரிக்காவின் உற்பத்திகளை வாங்காமல் முஸ்லிம் நாடுகள் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் — தீர்மானங்களில் கூறப்பட்டுள்ளன.

பலஸ்தீனர்களின் நிலங்களையும், வீடுகளையும் ஆக்கிரமித்து வரும் இஸ்ரேல், யூதக்குடியேற்றங்களை அபிவிருத்தி செய்து வருகின்றது.

ஆகவே இஸ்ரேலுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்றும் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பலஸ்தீன விடுதலைக்கான வெகுஜன முன்னணியின் தலைவர் அஹ்மத் ஜிப்ரில் இஸ்ரேலுடனான 'இஸ்திபாதா' போராட்டம் நாளுக்கு நாள் வளர்வதாகக் குறிப்பிட்டார்.

முஸ்லிம் நாடுகள் தங்களது இராணுவங்களை நேரடியாக மோதலில் ஈடுபடுத்தாவிட்டாலும் அவர்களை எல்லைகளில் இருந்து அகற்றி விடும் படியும், அப்போது சாதாரணமக்கள் எல்லை தாண்டி வந்து போராட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்றும் — ஜிப்ரில் கூறினார்.

இதேசமயம், பலஸ்தீனப் போராட்டத்தை ஆதரித்து மாநாடு நடத்தியதன் மூலம் ஈரான் தீவிரவாதத்துக்குத் துணை போவதாக அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. (ஓ)

## அழகுராணி குறித்த செய்தியில் உண்மையில்லை

பாரிஸ், ஏப். 30

பிரான்ஸ் அழகுராணியாக இவ்வாண்டு தெரிவு செய்யப்பட்டவர் பெண்ணாகமாறிய ஆண் என்று தனது இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட செய்தி நகைச் சுவைக்காக எழுதப்பட்டதே தவிர உண்மையல்ல என்று அந்த இணையப்பதிப்பின் ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

## ஆளுங்கட்சியில் பிளவு

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் ஆளும் ராஷ்டிரீய ஜனதா தளத்தில் பிளவு ஏற்பட்டுள்ளது. அதிருப்தியாளர்கள் குழுத் தலைவர் உட்பட 3 பேர் கட்சியிலிருந்து 6 ஆண்டுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

## உலகின் பெரும் செல்வந்தர்

உலகின் மிகப் பெரும் செல்வந்தர் என்ற பெருமையை 'வால்மார்ட்' நிறுவனங்களின் அதிபர் சேம் ரொப்ஸன் வால்ரான் பெற்றுள்ளார்.

உலகெங்கும் உள்ள 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ''வால் மார்ட்'' பல்தொகுதிகளின் உரிமையாளரான வால்ரனின் சொத்தின் மதிப்பு 5 லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

'மைக்ரோ சொவ்ட்' கணனி நிறுவன உரிமையாளரான பில்கேட்ஸ் கடந்த வருடம் உலகின் பெரும் செல்வந்தராகக் கருதப்பட்டார்.

# இந்திய தேர்தல் களத்தில் குளறுபடிக் கூட்டணிகள்!

### பிரசாரங்களில் விசித்திரம், புதுமைகள்!!

சென்னை, ஏப். 30

இந்தியாவில் 5 மாநிலங்களில் நடைபெற உள்ள சட்டசபைத் தேர்தல்களில், குளறுபடியான தேர்தல் கூட்டணிகளால் கட்சிகளுக்கு தேர்தல் பிரசாரம் செய்வதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

தமிழகத்தில் அ. தி. மு. கவுடன் பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன.

இதேசமயம் பக்கத்தில் உள்ள பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் அ. தி. மு. கவும் பா. ம. கவும் ஓரணியாக அனைத்துத் தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. இந்த அணியை எதிர்த்து த. மா. கவும், காங்கிரஸும் இணைந்து எல்லாத் தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன

இதனால் தமிழகத்தில் ஒன்றையொன்று ஆதரித்தும் பாண்டிச்சேரியில் எதிரெதிராகவும் பிரசாரத்தில் ஈடுபட வேண்டிய குழப்பமான நிலையில் இந்த இரு அணிகளும் சிக்கித் தவிக்கின்றன.

இதேபோன்று, தமிழகத்தில் காங்கிரஸை ஆதரிக்கும் இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சிகள் கேரளா மற்றும் மேற்கு வங்கத்தில் அதே காங்கிரஸை எதிர்த்துப்போட்டியிடுகின்றன

இதனால் குறிப்பிட்ட கட்சிகளின் பேச்சாளர்கள் ஒரு கட்சியை ஒரு மாநிலத்தில் ஆதரித்தும், மற்றொரு மாநிலத்தில் எதிர்த்தும் பிரசாரம் செய்யும் விசித்திரச் சூழ்நிலை தோன்றியுள்ளது.

## புதிய அணி

தமிழ் நாட்டில் வரும் தேர்தலில் எந்தக் கட்சியும் பெரும்பான்மைப் பலம் பெறாவிட்டால், தி. மு. க., அ. தி. மு. க அல்லாத புதிய அணி ஒன்று உருவாக்கப்படும்.

இவ்வாறு தமிழக ஜனதாக் கட்சித்தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

ஜாதிக்கட்சிக் கூட்டணிகளுக்கும், ஊழல் கட்சிகளின் கூட்டணிகளுக்கும் தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஓ)

# உழைப்பாளர் இன்னல்கள் தீர நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம்

## பல்கலைக்கழகத் தொழிற்சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 30

தொடரும் கொடிய யுத்தத்தினால் அன்றாடத் தொழில்களை மேற்கொள்ள முடியாது அவலப்படும் உழைப்பாளிகள் இன்னல்தீர சகல முயற்சிகளும் எடுக்கப்படுவது அவசியமாகும் என்று யாழ். பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில் நுட்ப அலுவலர் ஒன்றியம் விடுத்துள்ள மேதினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உழைக்கும் வர்க்கம் தனது உரிமைகளை வென்றெடுக்க, அதனைப் பாதுகாக்க அணிதிரளும் வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாள் தொழிலாளர்களின் இந்த மேதின நன்னாளாகும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நாளில் உழைக்கும் வர்க்கத்திற்காக குரல் கொடுக்கும் தொழிற்சங்கம் என்றவகையில் நாமும் இந்த மேதினத்தைக் கொண்டாடுகிறோம்.

தொழிற்சங்கங்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் அமைப்புக்கள் பல அண்மைக் காலங்களில் தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் சம்பவங்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினரை நடுவீதியில் விரட்டிய சம்பவங்கள் நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் உழைப்பாளிகளின் மண்ணான எங்கள் யாழ். மண்ணில் நிகழ்ந்துள்ளமை மிகவும் கண்டிக்கப்படவேண்டியதாகும். இதற்காக உழைக்கும் வர்க்கத்தினராகிய நாம் மிகவும் மனவேதனை அடைகின்றோம். உழைப்பாளிகள் அவர்களின் உரிமைகள் பற்றிய சமூக விழிப்புணர்வு ஏற்படாமையே இதற்குக் காரணமாகும்.

தொடரும் கொடிய யுத்தத்தினால் அன்றாட தொழில்களை மேற்கொள்ள முடியாது அவலப்படும் உழைப்பாளிகள் இன்னல் தீர சகல முயற்சிகளும் எடுக்கப்படுவது அவசியமாகும்.

உரிமைகளைப் பாதிக்கும் சட்டங்கள், அதை சரி என வழிமொழியும் அடிமைத்தனம் உழைக்கும் வர்க்கத்தினரிடமிருந்து அறவே அகல வேண்டும். தொழிலாளர்களிடையே தனிப்பட்ட குரோதங்களை தொழில் ஸ்தானங்களில் சாதிக்கும் மனப்பான்மை வேலைகொள்ளும் வர்க்கத்தினரிடமிருந்து விலக வேண்டும். அடக்கி ஒடுக்கி வேலை வாங்கும் தன்மை அகலவேண்டும். தமக்குரிய கடமையை சரிவர செய்வதால் உழைக்கும் வர்க்கம் யாருக்கும் அஞ்சத் தேவையில்லை. உரிமைகள் மறுக்கப்படுமிடத்து ஒன்றுபட்டுப்போராடுவதற்கு அஞ்சவும் கூடாது. — என்று உள்ளது. (-உ3)

### வடமராட்சியில் கல்வி பயிலும்

# தென்மராட்சி மாணவருக்கான பாடநூல் இன்று விநியோகம்

## அதிபர்கள் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்து

தென்மராட்சி, ஏப். 30

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தற்காலிகமாக இணைந்து கல்வி கற்கும் தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவச பாட நூல்கள் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் நெல்லியடி மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் வழங்கப்படவுள்ளன.

தற்போது பாடசாலையில் கல்வி கற்கும் தென்மராட்சி வலய மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய புத்தகங்களின் விவரங்களை அந்தந்த அதிபர்கள் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை—

வலிகாமம் பகுதியில் உள்ள பாடசாலைகளில் இணைந்து கல்வி கற்கும் தென்மராட்சி வலய மாணவர்களுக்கான பாட நூல்கள் விரைவில் மருதனார்மடத்தில் இயங்கும் கோட்டக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையில் —

அண்மையில் தென்மராட்சிக்கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு வழங்கவென அனுப்பப்பட்ட பாடநூல்களில் தரம் 7,8,9,11 ஆகிய வகுப்புக்குக் குறைந்த அளவு பாடநூல்களே வந்துள்ளதால் அனைத்து மாணவர்களுக்கும் அவற்றினை விநியோகிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

தரம் 11 வகுப்பில் 1500 மாணவர்கள் பயிலும் போதிலும் 260 கணித பாடப் புத்தகங்களும், தரம் 8இல் உள்ள 1500 மாணவர்களுக்கு 450 விஞ்ஞான பாடப் புத்தகங்களுமே வந்துள்ளன.

ஒரு பாடப் புத்தகம் மூன்று வருடங்கள் பாவனையில் இருக்க வேண்டுமென விதி உள்ள போதிலும் கடந்த வருடம் மாணவர்களும் பாடசாலைகளும் பாடப் புத்தகங்களைக் கைவிட்டு வந்ததால் —

அனைத்து மாணவர்களுக்கும் புதிய பாடநூல்கள் வழங்க வேண்டிய அவசியம் வலய அலுவலகத்திற்கு ஏற்பட்டுள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-117)


நல்லூர் வணிகர் கழகம்

**முக்கிய அறிவித்தல்**

நல்லூர் வணிகர் கழகத்திற்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களையும் மேதினமாகிய நாளை (01 - 05 - 2001) செவ்வாய்க்கிழமை முழுமையாகப் பூட்டி ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

- நிர்வாகத்தினர்.

நல்லூர் வணிகர் கழகம்,
திருநெல்வேலி-கிழக்கு.

(87235)



**நன்றி நவில்கின்றோம்**

அமரத்துவம் அடைந்த சிவபாலனின் பூதவுடலை வைத்தியசாலையில் இருந்து அத்தினமே எடுத்து வர உதவிய வைத்தியசாலையைச் சேர்ந்தவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் இரவு பகலாக பராமரித்து பெற்றோரிடம் அனுப்புவதற்கு சகல வழிகளிலும் தொடர்பு கொண்ட கலாசாலை பல்கலைக்கழக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும் வழி அனுப்பும் நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கும் படகு செலுத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்

தற்காலிக முகவரி: கார்த்திகேசு கரண்டீபன் (மைத்துனர்)
94/1, புங்கன்குளம் வீதி,
அரியாலை, பூநகரி.
யாழ்ப்பாணம். (87236)


# ராணுவ வாகனம்-மோ. சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

## யாழ். மடத்தடிச் சந்தியில் சம்பவம்

இரு வேறிடங்களில் நேற்று இடம்பெற்ற இரண்டு வீதி விபத்துக்களில் மூவர் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் கண்டி வீதி மடத்தடிச் சந்திப் பகுதியில் இராணுவ கனரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் யாழ்ப்பாணம், மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த அலோஸியஸ் தேவராசா (வயது 41), மிருசுவிலில் இருந்து இடம்பெயர்ந்து மத்தியூஸ் வீதிப் பகுதியில் வசிப்பவரான பிரான்ஸிஸ் அருளானந்தம் (வயது 65) ஆகிய இருவரும் படுகாயம் அடைந்தனர்.

புத்தூர் நவக்கிரிப் பகுதியில் மோட்டார் — சைக்கிள் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவரான மல்லாகத்தைச் சேர்ந்த நாகலிங்கம் சிவானந்தம் (வயது 53) என்பவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-15)

## உதவிக்கு ஓடிய பெண்ணுக்கு நேர்ந்த கதி

தென்மராட்சி, ஏப். 30

நள்ளிரவில் பக்கத்து வீட்டில் திருடர்கள் வந்துள்ளதாகக் கூக்குரல் கேட்டதை அடுத்து உதவிக்கு ஓடிய பெண்ணை மறைந்திருந்த திருடன் மடக்கிப் பிடித்து அவரின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்து எடுத்தான். அது மட்டுமன்றி அந்தப் பெண்ணின் முகத்தில் கல்லால் தாக்கிக் காயப்படுத்தினான். இச்சம்பவம் அண்மையில் கரவெட்டிவடக்குஇடைக்குறிச்சி என்னும் இடத்தில் இடம்பெற்றது.

காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா ஜனார்த்தனி (வயது 26) என்னும் குடும்பப் பெண் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்—

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-117)

## கலைநிகழ்வு

வலிகாமம் தெற்கு, ஏப். 30

வலிகாமம் தெற்கு பிரதேச முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வொன்று எதிர்வரும் 5 ஆம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் க. கமலசேகரன் தலைமையில் வலிகாமம் தெற்கு பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினர் இக்கலைநிகழ்வை நடத்த உள்ளனர். (152)

## வெளியீட்டு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.30

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு இடம் பெறவிருந்த கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் 'சுரபி' சஞ்சிகையின் வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## கொடுப்பனவு

தென்மராட்சி, ஏப். 30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு காசோலை மூலம் இன்று முதல் வலய அலுவலகத்தில் வழங்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க - 117)

## ஊரெழுப்பகுதியில் துணிகரத் திருட்டு

கோப்பாய், ஏப் 30

ஊரெழு கிழக்கில் அண்மையில்ஒரு வீட்டில் பகல் வேளையில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் அருகிலுள்ள தேவாலயத்துக்குச் சென்ற வேளை கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் பணத்தைச்சுருட்டிக்கொண்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-72-4)

## இளவாலையில் பிரதேச செயலக நடமாடும் சேவை

நவாலி, ஏப். 30

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தின் நடமாடும் செயலகச் சேவை எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழன் காலை 9 மணி முதல் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இச் சேவை பெரியவிளான் மாரீசன் கூடல், இளவாலை முள்ளானை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்காக நடைபெறவுள்ளது. (க-100)


**மரண அறிவித்தல்கள்**

**திருமதி தங்கம்மா மகேசன்**

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கம்மா மகேசன் நேற்று முன்தினம் (28-04-2001) கொழும்பில் காலமானார்.

அன்னார் சி. மகேசன் (இளைப்பாறிய பிரதம லிகிதர். இ.மி.ச.) அவர்களின் அன்பு மனைவியும் சிறிதரன் (ஜேர்மனி), வாசுகி, துஷ்யந்தி (ஆசிரியை, யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்), கதாதரன் (மொழிபெயர்ப்பாளர், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் இ. சிவகுமாரன் (R.H.O. மக்கள் வங்கி), சு. சிவகுமாரன் (சவூதிஅரேபியா), திருமதி சரோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30-04-2001) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சிவகுமாரன்
(மருமகன்)

உடையார் வளவு,
சுன்னாகம். (சி/16491)

**செல்வி மாயா கிருபா பியூபல்**

மேலாட் வைத்தியசாலை இணுவில், கூட்டுறவு வைத்தியசாலை தெல்லிப்பழை ஆகியவற்றில் கடமையாற்றிய வைத்திய கலாநிதி திருமதி C. B. செங்கம்மா டேவிட் பியூபல் அவர்களின் அன்புப் புதல்வி செல்வி மாயா கிருபா பியூபல் அவர்கள் நேற்று (29-04-2001) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் செல்வி C. B. முத்தம்மா (பங்களூர்), திருமதி D. சித்திராங்கனி (கொழும்பு), பெஞ்சமின், பியூபல் ஆகியோரின் பெறாமகளும் C. B. வெல்லியபபா (பங்களூர்), T. குமாரசாமி (லண்டன்), திருமதி மேஜி ஜேக்கெப் (கனடா) ஆகியோரின் மருமகளும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (30-04-2001) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
டாக்டர் செங்கம்மா (தாயார்)
திரு. வ. பரஞ்சோதிநாதன்
குடும்பத்தினர் (பாதுகாவலர்)

கூட்டுறவு வைத்தியசாலை,
தெல்லிப்பழை கிழக்கு. [87237]

# யாழ். மண்ணை என்றும் நேசித்த பெருமகனார் பிதா லோங் அடிகள்

...லைசிறந்த கல்விமானும் ...சேவையாளருமாகிய பிதா ...ம்.எவ். லோங் அடிகளின் 40 ஆவது நினைவுதினம் இன் றாகும். அதனை ஒட்டி இச் சிறு குறிப்பு பிரசுரமாகின்றது.

...கோடி, மறைந்தவர் ...மனதில் நிலைத்தவர் ...இந்த வரிசையில் விரல்விட்டு ...யவர்களில் யாழ். மண் ...தன் உயிருக்கு மேலாக ...பெருமகனார் பிதா லோங் அ...என்றால் அது மிகையாகாது. ...வரை நாம் உளம் உவந்து சிர...த்தி, கரங்கூப்பி நன்றிப் பெ...குடன் இறைவனடி சேர்ந்த 40 ஆ... (30-04-2001) ஆண்டு நினைத்தல் நின...வு கூருவோம். இவர் மாபெ ரும்...ணிகளைச் சீரிய நோக்குடன் சித்...ாக்கிய சமர்த்தர். கல்வித் துறை...யிலே பலரும் போற்றச் சிறப் ...ழாரமும் பெற்றவர். யாழ்.புனித ...திரிசியார் நிறுவனத்தின் தலை ...த அதிபர் என்ற வரிசையில் ...ங் அடிகளின் பெருமை ...அம்பலமாகும். இவரின் ...ரும் பணிக்கு இலக்கணமாக ...கை அரசு 22.05.1990இல் முத் ...வெளியிட்டுக் கௌரவித்தது.

### பொற்காலம்

...புனித பத்திரிசியார் கல்லூரி ...நன்னிகரில்லாத அதிபராக ...பணியாளர் T.M.F. லோங் M.A. (cantab) அடிகள் 1936- ...வரை அதிசிறப்புப் பணியாற்றி ...இவரின் 18 வருட சிறந்த நிர் ...காமைத்துவத்தினால் கத் ...கத் துறையிலும், கல்வித் ...லும், விளையாட்டுத் துறையி ...ஒழுக்கத் துறையிலும் ஒழுக்கத் ...மாணவச் செல்வங்கள் புகழ் ...த உன்னதராகினர். இலங்கைக் ...வரலாற்றிலே இக்கல்லூரி பல ...கூடித் தனித்துவம் பெற ...து என்பது வெள்ளிடை மலை. ...அடிகளால் உருவாக்கப்பட்ட ...பரம்பரைகள் ஈழ நாட்டில் மட்டுமன்று அகிலமெங்கும் சுடர்விட் டுப் பிரகாசிக்கும் தீபங்களாகத் திகழு கின்றன.

அயர்லாந்திலுள்ள லிமெறிக் என்னு மிடத்தில் கல்வியிலும் இறைபற்றி லும் வைரத் தூண்களாகத் திகழ்ந்த உத்தம லோங் குடும்பம். இவர்களின தவப்பயனால் மூன்று நற்புத்திரர் களையும் ஒரு நற் புத்திரியையும் ஈன் றெடுத்து கல்விமான்களாக உருவாக்கி இயேசுவின் தொண்டிற்கே அர்ப்ப ணித்த தியாகிகள். புனித கனியான தியாகப் புதல்வன் லோங் அடிகள் 22.04.1896 இல் பிறந்தார். இவரது அண்ணன் கலாநிதி பிறெட்ரிக், இவ ரது தம்பி கலாநிதி டானியல், இவ



ரது தங்கை அருட்சகோதரி எமா. அனை வரும் யேசுவின் திராட்சைத் தோட்டத்தில் உத்தம பணியாளர் கள்.

1954இல் பிதா லோங் அடிகள் திருப்பணியாற்றத் திடீரென அவுஸ்திரே லியா புறப்படுமுன் யாழ்.முற்றவெளி யில் மாபெரும் சன சமுத்திரம் திரண்டு அவருக்குப் பிரியாவிடையும் நன்றி நவிலும் விழாவும் நடத்தினர். அவ் வேளை அவரது இறுதிக் கூற்று "நான் எங்கிருந்தாலும் யாழ்.மகனாக வாழ் வேன்" என லோங் அடிகள் கண் ணீர் வடித்தார். அது 30.04.1961இல் அடிகளின் மறைவினால நிரந்தரக் கண்ணீர் ஆகிவிட்டது.

### நூற்றாண்டு விழா

யாழ்.புனித பத்திரிசியார் கல்வி அன்னைக்கு 1950இல் நூற்றாண்டு விழா பூர்த்தியாகும் வேளையில் கல்விமான் பிதா மத்தியூஸ் அடிகளின் ஞாபகார்த்த மாபெரும் மூன்றுமாடிக் கட்டடம் பூர்த்திபெற்று உன்னதமான பெருவிழாவும் நடைபெற்றது. இதனை உருவாக்க இரவு பகலாக அயராது கடினமாக உழைத்த மாமேதை லோங் அடிகளைக் காலமெல்லாம் நினைவு கூர நாம் கடமைப்பட்டுள்ளோம்.

யாழ்.நூலகம் தென்கிழக்காசியா வின் முடிமணியெனத் திகழ, பிதா லோங் அடிகள் மேற்குலகநாடுகளுக் குச் சென்று தமது தொப்பியை நீட்டி, யாசகம் செய்து நற்கைங்கரியத் திற்காக அன்று ஒருகோடி நிதியத் தைத் திரட்டி ஒப்படைத்தார்.

26.03.1945இல் யாழ். நூலகத் துக்கு அடிகல் தவத்திரு. லோங் அடிகளினால் நடப்பட்டது. இது வர லாற்று முக்கிய நிகழ்வாகும்.

### பிதா லோங்கின் சிலை

'நல்லதொரு நூலகம் சிறந்த தொரு பல்கலைக்கழகம்' என்பதைச் செயல்ருபப்படுத்திய மாமனிதனை மதித்து 20.12.1975இல் 'நன்றிமறவேல்' என்பதற்கு ஏற்ப யாழ். புனித பத்திரி சியார் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினர் யாழ்நூலகத்தின் நுழை வாயிலில பேரறிஞர் லோங் அடிகளின் சிலையை நிறுவி நன்றிப்பெருக்கு டன் சிலைத் திறப்புவிழாவைச் சிறப் பாக நடத்தினர். 01.06.1981இல் நடு இரவில் அரச படையினரால் யாழ். நூலகம் எரிக்கப்பட்டு, விலை மதிப் பற்ற 97,000 நூல்கள் நாசமாகின. இதனை அறிந்ததும் பன்மொழி மேதை தாவீது அடிகள் உயிர் துறந் தார். யாழ்.நூலக நுழைவாயிலில் பிதா லோங் அடிகளின் அசையாத சிலை எரிந்த பின்னும் சரிந்த பின் னும் இன்றும் காத்து நிற்கிறது. சிலையைப் புனரமைப்பது எம் பணி யாகும். ❊

**துரை. ஆரோக்கியதாசன்**


**ராஜா**
யாழ்ப்பாணம்
அஜித், லைலா
மற்றும் பலர் நடிப்பில்
**தீனா**
காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)
(C/16490)

**லஷ்சுமி**
இணுவில்
புதிய வெளியீடு
விஜயகாந்த், ரம்யாகிருஷ்ணன், பிரகாஷ்ராஜ் நடிப்பில்
**வாஞ்சிநாதன்**
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜய், சிம்ரன்
நடித்த
**ப்ரியமானவளே**
(2ஆம் திகதி வரை)
(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (புதியநேரம்)
(C/16492)



## முதலாம் ஆண்டு நிறைவு

**324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

### கணனி விஞ்ஞானத்துறைத் தலைவரின் செய்தி

செய்தித் தொடர்பு நுட்ப ஆளுகைக்குட்பட்டுள்ள இன் றைய நவீன உலகின் ஓர் அத்தியாவசியக் கருவியாகக் கணனி அமைந்துவிட்ட இந்நாளில் கணனிப் பயன்பாட்டுக் கல்வி மற்றும் கணனிக் கையாளுகைக்கான அறிவைப் பெறு வது உத்தியோகத்தர்கள், மாணவர்கள், வர்த்தகத் துறை யினர்களுக்கு மட்டுமன்றி தனிநபர்களுக்கும் இன்றியமையா ததாகிவிட்டது. இந்த வகையில் அறிவூட்டுகின்ற கல்வி நிறுவனங்களில் UNDP மற்றும் GTZ ஆகிய நிறுவனங் களின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டு தன் பணியைச் செவ்வனே புரிந்து வருகின்ற Mobile@net Computer Services (MCS) கல்வி நிறுவனம் தன் முதலாண்டைப் பூர்த்தி செய்து நிற்கின்றது. வங்கி உத்தியோகத்தர், மின்சார சபை ஊழியர், நூலக உத்தியோகத்தர் மற்றும் தனி நபர்கள் எனப் பலதரப்பட்ட மாணவர்களுக்கு இக்கட்டான காலகட்டத்திலும் அறிவு புகட்டி இன்னும் பலபேரையும் மாணவர்களாகக் கொண்டு, அரச அதிபர் துணைக்குழுவின் மேற்பார்வையில் சிறப்பாகத் தன் செயற்பாட்டைத் தொடர் கிறது. அதன்பணி மேன் மேலும் சிறப்புற்றுத்தொடர வாழ்த்து கின்றோம். அதன் முகாமைத்துவ நிர்வாகர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவர்க்கும் எமது பாராட்டுக்களும் வாழ்த் துக்களும் உரித்தாகுக.

**கலாநிதி சி.மகேசன்**
B.Sc(Jaffna).M.Sc.(Cardiff).Ph.D.(Wales), MBCS, CEng
தலைவர், கணனி விஞ்ஞானத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

### GTZ இணைப்பாளரின் செய்தி

போர் அனர்த்தங்களினால் சீரழிந்து போன யாழ். மாவட் டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஜிரிசற் நிறுவனம் வெறுமனே உள்ளகக் கட்டுமான புனர மைப்பு வேலைகளில் மட்டும் ஈடுபடாமல் மாவட்டத்தின் பொருளாதார, புனர்நிர்மாணப் பணிகளிலும் கவனம் செலுத் துகிறது.

இந்த வகையில் தொழில் முயற்சியாண்மை பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி நவீனமுறையில் வர்த்தக முகா மைத்துவ பயிற்சித் திட்டமொன்றை (CEFE) வழங்கி வருகி றது. இத்திட்டம் புதிய வர்த்தக முயற்சியாளர்களுக்கும், தமது வர்த்தக நிறுவனங்களை நவீனமயப்படுத்தி விரி வாக்கம் செய்ய விரும்புவர்களுக்கும் மிகுந்த பயனளிக்கும் பயிற்சிகளை வழங்குகிறது. இத்திட்டத்தில் பயிற்சியைப் பெற்றுக் கணனிப் பயிற்சி நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து சிறப்பாகவும், முன்னேற்றகரமாகவும் நிர்வகித்து வரும் MCS நிறுவன இளைஞர்கள் பாராட்டுக்குரியவர்கள். இவர் களது இந்த முயற்சி இன்று ஓராண்டு நிறைவைக் கொண்டா டும் இச்சந்தர்ப்பத்தில் எமது வாழ்த்துக்களையும் தெரி வித்துக் கொள்கின்றோம்.

இந் நிறுவனம் மேலும் விரிவடைந்து வளர்ச்சியடை வதோடு இப்பகுதி இளைஞர்கள், யுவதிகளுக்கு சிறந்த கணனித்துறைப் பயிற்சிகளை வழங்கி அவர்களது முன்னேற் றத்திற்குமான சேவைகளைத் தொடர்ந்து வழங்கவேண்டும் எனவும் வாழ்த்துகிறோம்.

**இணைப்பாளர்**
German Technical Co-Opertaion,
Jaffna Rehabilation Project,
11, Kandy Road, Jaffna.

**இலவச கணனிப் பயிற்சி பிரிவு II ஆரம்பம்: 05.05.2001**
(C/16490) பதிவுகளை 03.05.2001 இற்கு முன் மேற்கொள்ளவும்


## காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கத்தினர் வன்னி செல்வதில் -விடாப்பிடி!

கொழும்பு,ஏப்.30

விடுதலைப் புலிகளின் காவலில உள்ள படையினரைப் பார்வையிடு வதற்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் செல்லத் தாங்கள் தயாராக இருப்பதாக காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்கார தெரிவித் துள்ளார்.

வன்னி செல்வதற்கு அரசிடமும், விடுதலைப் புலிகளிடமும் அனுமதி கோரியுள்ளோம் என்றும் -

அரசு அனுமதி வழங்காத பட் சத்தில் விடுதலைப் புலிகளின் அனு மதி கிடைத்ததும் அங்கு எம்முடைய பாட்டிலேயே செல்வோம் என்றும் அவர் மேலும் சொன்னார்.

" வன்னி செல்வதற்காக பல தடவைகள் அரசிடம் அனுமதி கோரி னோம். ஜனாதிபதியைச் சந்தித்த சமயமும் இந்தக் கோரிக்கையை விடுத்தோம். எனினும் அரசு இன்ன மும் அனுமதி வழங்கவில்லை" - என றும் அவர் மேலும் கூறினார்.

"வன்னியில் விடுதலைப்புலிகளின் காவலிலுள்ள படையினரைப் பார்வை யிட அனுமதி வழங்கும்படி விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திடம் விண்ணப்பித்துள்ளோம். அவர்களின் அனுமதி கிடைத்ததும் அங்கு செல் வோம்" என்றும் - அவர் சொன்னார்.

(உ-3)


அநேகரது வேண்டுகோளுக்கமைய வெளிவந்துவிட்டது.



மிக அண்மைக்கால பொது அறிவு விடயங்களுடன்
நுண்ணறிவு விடயங்களையும் உள்ளடக்கி
G.C.E. (A/L), S.L.A.S. பரீட்சார்த்திகளுக்கு ஏற்ற
**பொதுச் சாதாரணப் பரீட்சை வழிகாட்டி நூல்**
மூன்றாம் பதிப்பு - 2001 ஏப்ரல்
ஆக்கியோர் : உமாஷங்கர் & கமலதாஸன்
கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா புத்தகசாலை உட்பட சகல பிரபல புத்தகசாலைகள்
வெளியீடு : IPE - SRI LANKA (87241)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 13 | | 29 |
| 05 | | 03 |
| 1930 | | 2001 |



### அமரர் சின்னையா நடராஜா

மாதம் ஒன்று ஆனதப்பா
ஆறவில்லை எம் துயரம்
பாசமென்னும் நீருற்றி எமை
பாங்குடனே வளர்த்து
பெருமையுடன் வாழவைத்த அருமை ஐயா!
பாராது நாமும் பல வருடம்
பரிதவித்து வாழ்ந்தோம்
பார்க்க ஒருநாள் பறந்து நாம்
வருவோம் என்று பாவி நாம்
கற்பனையில் வாழ காலனவன்
கைப்பற்றி விட்டானே!

இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வி லும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.* (87234)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### கந்தசாமி கனகம்மா

சாவகச்சேரி, கெருடாவிலைச் சேர்ந்தவரும், 175, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட கந்த சாமி கனகம்மா நேற்று (29.04.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும், இராசம்மா, இராசமணி, காலஞ்சென்றவர்களான பூமணி, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமணிதேவி, திருஞானசம்பந்தர் (உதவித் தேர்தல் ஆணையாளர், வவுனியா), ஸ்ரீஸ்காந்தராசா (முழங்காவில்), யோகேஸ் வரி, இராஜேஸ்வரி, ஜெயகாந்தராசா, திருச்செல்வம் (ஆசிரியர், வவுனியா), எழிற்செல்வன் (கிராம உத்தியோகத்தர், நவாலி) ஆகியோரின் சிறிய தாயாரும், சிவஞானம், சிவராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2001) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*175, 2ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (87243)

தகவல்:
நா.கந்தசாமி (கணவர்)

# வடக்கு - கிழக்கில் 1,440 மாணவர்கள் ஜனாதிபதி புலமைப்பரிசில் பெறுவர்

சுன்னாகம்,ஏப்.30

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயிரத்து 440 மாணவர்கள் இவ்வாண்டு விசேட ஜனாதிபதி புலமைப் பரிசிலைப் பெறவுள்ளனர்.

மாகாணத்திலுள்ள 24 வலயங்களையும் சேர்ந்த 6, 7, 8ஆம் தரங்களில் கல்வி பயிலும் தலா 20 மாணவர்கள் வீதம் இந்தப் புலமைப்பரிசிலைப் பெறுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புலமைப் பரிசிலைப் பெறுவதற்குத் தகுதியான மாணவர்கள் முதல்மொழி, கணிதம் உட்பட சகல பாடங்களிலும் ஆண்டிறுதிப் பரீட்சையில் 50க்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும். அவர்களது குடும்ப வருமானம் 2 ஆயிரம் ரூபாவுக்கு குறைவாக இருப்பதுடன், குறித்த மாணவரின் பாடசாலை வரவு 80 வீதத்துக்குக் கூடுதலாக இருக்க வேண்டும்.

பொருளாதார வசதி குறைந்த - வறுமை மட்டத்தில் வாழும் - கற்கும் திறன் கொண்ட மாணவர்களை விசேடமாகத் தெரிவு செய்து அவர்களுக்குப் பாடசாலைக் கல்வியினை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் மாதாந்தம் 250 ரூபாவீதம் வருடத்தில் பத்து மாதங்களுக்கு கொடுப்பனவைப் பெறுவர்.

இக்கொடுப்பனவு தரம் 11 வரை தொடர்ச்சியாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை இன்று பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-27)

# திருமலை மஹிந்தபுரவில் புலிகள் தாக்குதல் !

கொழும்பு,ஏப்.30

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் நகரில் இருந்து கிழக்கே 35 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மஹிந்தபுர என்னும் கிராமத்திற்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் காலை 11.15 மணியளவில் தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

படையினர் பதில் தாக்குதல் நடத்தி புலிகளை விரட்டி விட்டதாகவும் -

இத்தாக்குதலின் பின்னர் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது மூன்று பொதுமக்களின் சடலங்கள் மீட்கப்பட்டன என்றும் - தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்த மோதலின் போது சிப்பாய் ஒருவரைக் காணவில்லை என்றும் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ-3)

## தொடரும் ஷெல் தாக்குதல்களினால்

# பூநகரிப் பகுதியிலிருந்து 5,000 பேர் இடம்பெயர்வு

வவுனியா,ஏப்.30

பூநகரிப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்களை அடுத்து அந்தப் பகுதியில் உள்ள ஏழு பாடசாலைகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 மாணவர்கள் உட்பட 5 ஆயிரம் பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

செம்மண்குன்று, யானைமட... கௌதாரிமுனை, செல்லையாத்தீவு, நல்லூர், சாம்... ஆகிய பகுதி மக்களே இடம் பெயர்ந்துள்ளனர்.

பூநகரி தம்பிராய் பாடசாலை அதிபரின் அறைக் கூரையைப் பிய்த்துக் கொண்டு விழுந்த ஷெல் ஒன்று அதிபரின் மேசை மீது வெடிக்காமல் கிடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சு.கவின் யாழ். மேதின... கட்சி அலுவலகம் அருகே

யாழ்ப்பாணம்,ஏப்.30

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளை, சுதந்திரக் கட்சி தொழிற் சங்கங்களுடன் இணைந்து நடத்தும் மேதின விழா நாளை காலை 10 மணிக்கு யாழ் நகரிலுள்ள கட்சியின் அலுவலகத்துக்கு அருகில் நடைபெறவுள்ள...

கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் மாவட்ட அமைப்பாளருமான வேல்முருகு தங்கராசா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் தொழிற்சங்க பிரமுகர்கள் ப... உரையாற்றுவார்கள். (உ...)

# பேச்சுக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகத்தின் ஆதரவைப் பெற முயன்றனர் என்றும் -

ஆனாலும் 212 தடவைகள் யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளனர் என்றும் - அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசு மனித உரிமைகளை மதித்து நடப்பதை சர்வதேச நாடுகள் ஏற்றுள்ளன என்றும் -

புலிகளின் பிரசாரத்தை நம்பாது சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருகின்றன என்றும் -

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-9)

# களப்பலியான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிருஷ்ணவேணி - யாழ்ப்பாணம்)

✪ கப்டன் வெற்றிநிலவன் (கோபால் இரவிச்சந்திரன் - விசுவமடு)

✪ கப்டன் சீலன் அல்லது வல்லவன்(பொன்னுத்துரை சுதாகர்- யாழ்ப்பாணம்)

✪ கப்டன் போதினி(காசிலிங்கம் றெஜிந்தா - யாழ்ப்பாணம்)

✪ கப்டன் மலரினி அல்லது பிரசன்னா(தங்கராசா சந்திரகலா- மன்னார்)

✪ லெப்டினன்ட் புரட்சிமாறன் (முருகையா வசந்தகுமார் - விசுவமடு)

✪ லெப்டினன்ட் தீபன் அல்லது தமிழரசன் (நமசிவாயம் சந்திரமோகன் - மட்டக்களப்பு)

✪ லெப்டினன்ட் மலர்விழி (சோமஸ்கந்தன் சசிகலா - கிளிநொச்சி)

✪ லெப்படினன்ட் செவ்வந்தி அல்லது மகிழினி (ஜெயக்குமார் உதயராணி - யாழ்ப்பாணம்)

✪ லெப்டினன்ட் வனநிலா(வெற்றிவேல் சிவலஷ்மி - திருகோணமலை)

✪ லெப்டினன்ட் அன்பழகி (இரத்தினசிங்கம் பிரசாந்தினி - மல்லாவி)

✪ லெப்டினன்ட் கலைத்தமிழ் (பழனியாண்டி கிருஷ்ணகுமாரி - கிளிநொச்சி)

✪ இரண்டாம் லெப்டினன்ட் புகழரசி (செல்லத்தம்பி அனோஜா - யாழ்பாணம்)

✪ இரண்டாம் லெப்டினன்ட் அஞ்சலா(ஆறுமுகம் நிர்மலாதேவி- வவுனியா)

✪ கிருபா (அந்தோனிப்பிள்ளை ஐயாமணி - முல்லைத்தீவு)

✪ மதி (பீற்றர்பிள்ளை பிரதீபன் - யாழ்ப்பாணம்)

✪ இசைவாணன் (கந்தசாமி - தயாநிதி - யாழ்ப்பாணம்)

✪ மலர்நேசன் (சின்னையா கிருஷ்ணகுமார் - திருகோணமலை)

✪ கதிரவன் (கனகரத்தினம் சசிகரன் - யாழ்ப்பாணம்)

எல்லைப்படை வீரர்கள் மூவரின் விவரம் வருமாறு:-

★ சண்முகம் கோகுலரமனேஸ்வரன்(திருகோணமலை)

★ இராமநாதன் விநோதராஜன் (வட்டக்கச்சி)

★ முத்துராஜா கோணேஸ்வரன் (மடு) (உ-164)

# படையினரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் இனங்காணப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் -

எஞ்சிய சடலங்கள் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன என்றும் -

விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (உ-3-9-164)

# சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு வசதியாக அரசையும் புலிகளையும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பம் இடவைக்கும் நடவடிக்கையில் சொல்ஹெய்ம் ஈடுபடுவார் எனக கொழும்பில் இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிட அரசு இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில் சொல்ஹெய்ம் வன்னி சென்று விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரனுடன் பேச்சுக்களை நடத்தலாம் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

அதேவேளை -

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதுவிடயமாக நோர்வே பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் படையினருக்கு ஏற்பட்ட பாரிய இழப்புக்களை ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சருக்குச் சுட்டிக்காட்டியுள்ள ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்கள் சிலர் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாகவும் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (உ-3-7)

# இந்த இராணுவப் பின்னடைவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை அது ஆரம்பித்து நான்கு நாள்களின் பின்னர் - இரண்டு 'டிவிஷன்' இராணுவப் படையணிகள் தாம் புறப்பட்ட பாதுகாப்பு முன்னரங்க நிலைகளுக்குத் திரும்பியதோடு - முடிவுக்கு வந்தது.

இந்த நான்கு நாள் துணிகர முயற்சிக்கு விலை, மூன்று அதிகாரிகள் உட்பட 180 துருப்புக்கள்.

விடுதலைப் புலிகள் வன்னியில் ஒப்படைத்த படையினரின் முப்பது சடலங்களுடன் சேர்ந்து அது மொத்தம் 210க்கும் அதிகமாகியது. காயமடைந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து அறுநூற்றுக்கும் அதிகம் - அதில் 225 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

மூன்று அதிகாரிகள் உட்பட 51 அரச படையினர் இந்த நடவடிக்கையின்போது காணமற்போயிருப்பதாக புலிகள் விடுத்த அறிவிப்பை இராணுவ அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

தங்களின் முன்னணி நிலைகளுக்கு அருகில் புலிகள் பெருமளவில் புதைத்து வைத்திருந்த அவர்களின் உள்ளூர்த் தயாரிப்புக் கண்ணிகளும் 'பாட்டா' மிதிவெடிகளுமே பெரும்பாலும் காயங்களை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்தன.

"தாக்குதல் நடத்தும் படையே எப்போதும் அதிக பாதிப்புக்களைச் சந்திக்கும்" ("An attacking force always sustains more casualties") - என்று யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா கூறினார்.

"ஒழுங்கைகளைத் துப்புரவு செய்த பின்னரே அவற்றின் வழியாகத் துருப்புக்கள் முன்னேறின. ஆனால் விழுந்த ஆட்லறிகளும், மோட்டார்களும் அவர்களைப் பாதுகாப்புத் தேடி ஓடவைத்தன. அப்படி ஓடிய சமயமே அவர்கள் கண்ணிகளில் சிக்கினார்கள்" - என்றும் அவர் கூறினார்.

மிதிவெடிகளில் சிக்கியவர்களில் ஒரு சிலர் வாழ்க்கையின் எஞ்சிய காலத்தில் ஒரு காலுடன்தான் நடமாட வேண்டும். ஏனையோர் இரண்டு கால்களையுமே இழந்து விட்டனர்.

சிறிய காயங்களுக்கு உள்ளானோர் கூட காயங்கள் ஆறி மீண்டும் களமுனைக்கு வருவதற்கு ஆறு, ஏழு வாரங்கள் பிடிக்கலாம்.

கடந்த வருடம் ஏப்ரலில் ஆனையிறவில் ஏற்பட்ட பின்னடைவை அடுத்து பலநூறு கோடி ரூபா செலவில் பாதுகாப்புப் படைகளை நவீனமயப்படுத்த வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது. தேவையான ஆயுத தளபாடங்கள் வந்து சேர்ந்தன. இந்தப் பிந்திய நடவடிக்கைக்கு முன்னதாக சுமார் நான்கு மாதங்கள் படைகளுக்குத் தேவையான மீள் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இந்தத் தடவை முக்கியமான விடயம் என்னவென்றால் -

இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்கும்படியான நிர்ப்பந்தம் ஏதும் அரசாலோ, அரசியல்வாதிகளாலோ பாதுகாப்பு உயர் பீடத்தின மீது பிரயோகிக்கப்படவில்லை என்பதுதான்.

பாதுகாப்புப் படைகளின் அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவு செய்து வழங்கிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, யுத்தநிறுத்தம் சமபந்தமான புலிகளின் கோரிக்கைக்குத் தாம் இணங்கப் போவதில்லை என்பதை மட்டும் தேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலின் பல்வேறு கூட்டங்களில் தெளிவுபடுத்தி வந்துள்ளார். அதனால் புலிகள் மீது அரச படைகள் தமது தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்பதை அவர் சுட்டிக் காட்டி வந்தார்.

அவர் விசேடமாகக் குறிப்பிட்டு ஒரு தாக்குதல் நடவடிக்கையையோ அல்லது அதற்கான ஒரு காலக் கெடுவையோ விதிக்கவேயில்லை.

அப்படியானால் 'அக்கினிச் சுவாலை' நடவடிக்கை பிழைத்துப் போனது ஏன்?

வடக்கில் இடம்பெறும் - குறிப்பாகக் கடந்த வருடம் ஆனையிறவை இழந்த பின்னரான - நடவடிக்கைகளை அவதானிக்கும் எவருக்குமே அங்கு தமது பாதுகாப்பு அரண்களைப் புலிகள் வலுப்படுத்தி வருகின்றார்கள் என்பது துலாம்பரமாகத் தெரியும். அவர்களும், ஏனைய பலரைப்போல, ஆனையிறவைக் கைப்பற்றுவதற்காக ஏதோ ஒரு நாள் பாதுகாப்புப் படையினரின் முன்னேற்றம் இடம்பெறும் என எதிர்பார்த்தார்கள்.

இத்தகைய நடவடிக்கையை அவர்கள் செயலிழக்கச் செய்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதானால், தாங்களே ஒருதலைப்பட்சமாக அறிவித்த நான்கு மாதகால யுத்த நிறுத்தத்தின் போது எதிர்பார்க்க முடியாத அளவு ஆயுதக் குவிப்பை புலிகள் நாடவேண்டியதாக இருந்திருக்கும்.

பேச்சுக் குறித்துப் பேசும்போதே கொரில்லாக்கள் யுத்தத்திற்கு நன்கு தயாரானார்கள் என்பது இதோ நிருபணமாகியுள்ளது.

இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் தாம் இருந்த பழைய பாதுகாப்பு நிலைகளுக்கு அதனை மேற்கொண்ட இரண்டு டிவிஷன் இராணுவ படையணிகளை பின்வாங்க வைத்ததன் மூலம் தாங்கள் எத்தகைய ஆயத்தங்களுடன் இருந்தார்கள் என்பதனைப் புலிகள் செயலில் காட்டியுள்ளார்கள்.

படைகளுக்கு என்னவாயிற்று? அவைகளை நவீன ஆயுதங்களுடன் வலுப்படுத்துவதற்காக கடந்த வருடத்தின் பின்னர் பல நூறு கோடி ரூபாவை அரசு செலவுசெய்தது என்பது இரகசியமல்ல. தேசிய பாதுகாப்பு விடயத்தில் அரசு மிக மோசமாக விட்டுக் கொடுத்திருப்பதாக வைத்தால் கூட -

செக்கோஸ்லோவாக்கியாவில் இருந்து யுத்த டாங்கிகள், பல்முனை றொக்கட் லோஞ்சர்கள் மற்றும் ஏனைய இராணுவத் தளபாடங்களைப் பெற்றுக் கொண்டதாக ... வாரங்களுக்கு முன்னர்தானே ... னுவம் அறிவித்திருந்தது!

பல்வேறு ஆயுதக் கொள்... களின் வரிசையில் பலகோடி ... கள் செலவான மற்றொரு ... வவு இது. சில கொள்வனவு சர்ச்சைக்குரியவையாக - ச... பின்னணியில் - செய்து மு... பட்டன.

இப்படி எல்லாம் ஆயுதக் கொ... வு செய்து ஆயுதங்களைச் ... பின்னரும் எங்கு தவறு நிகழ்...

ஏனைய இராணுவப் பெரு... ஙகள் போல 'அக்கினிச் சுவா... பேர்ழப்பும் மறக்கப்பட்ட ஒன்றாக... முடியுமா என்பது மட்டும் நிச்சய... கத் தெரியவில்லை. அப்படித்த... நடக்குமானால் கள முனையில் ... மறவர்கள் புரிந்த தியாகம் வீ... கிவிடும்; இறுதியில் அரசுக்கு ... குழப்பமாக முடியும்.

தணிக்கைக்கு மத்தியில் ... குதல் சார்பான பிரசாரத்துடன் ... விவகாரம் அணுகப்படுமானால் ... களுடன் சமாதானப் பேச்சு ந... வதை விடுத்து, இராணுவத் ... வையே மக்கள் வரவேற்கும் நி... ஏற்படும். புலிகள் இராணுவ ரீதி... பலவீனம் அடைந்திருக்கும் ... ஏன் பேச்சு என்ற நிலைதான் ... வும்.

ஆனால் இப்போது ஒரு பி... டைவு. இது சமாதான பி... ளுக்கு ஒரு வலுவைத் தரு... யம.

புதிய ஆயுதங்களுடன் ... ணுவத்தினால் புலிகளுடன் போ... முடியவில்லை அல்லது ... வெற்றி பெற முடியவில்லை ... அவர்கள் மீண்டும் வாதிடக்கூ...

இந்த நிலையில் தணிக்கை... நீக்குவதுதான் அரசின் நலனு... உகந்தது -

இப்படித் தெரிவித்திருக்கின்... அவர்.

மிக மிகக் குறைந்த விலையில்
தரமான பொருள்கள்!
போஸ்கோ வில்
பாடசாலை உபகரணங்கள்,
அலுவலகப் பாவனைப் பொருள்கள்,
அச்சு மை வகைகள் யாவும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
- இருவாரங்கள் மட்டுமே
(C/16485)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
PHYSICS
ஒளியியல்
By.KARUNANITHY [B.Sc. (Spl.)]
ஆரம்பம்: 02.05.2001 புதன் 4.30
2003 - பொறியியல்
MON., FRI. - 3.30
(87833)

அறிவித்தல்
2000, 2001 கல்வியாண்டில் ... பாடநெறிகளைப் பூர்த்திசெ... மாணவர்களினது சான்றிதழ்... எதிர்வரும் 07.05.2001 இல் ந... பெறவுள்ள நிறுவன தின விழா... வழங்கப்பட இருப்பதால் சான்... களைப் பெற இருக்கும் மாண... கள் 03.05.2001 இற்கு முன்ன... தங்கள் வரவினை உறுதிப்படு... மாறு கேட்டுக்கொள்ளப்படுகி... கள்.
10MS, 4DCP, 5DCP, 1DIT, 2DI...
1ACS, 2ACS
மேற்படி அணியைச் சேர்... மாணவர்கள் உடனடியாக அ... வலகத்துடன் தொடர்பு கொள்ள...
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்
(C/16469)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.